பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 27 செவ்வாய்க்கிழமை 09.04.2024 கதிர் 154

# புதிய கல்விக் கொள்கையால் இலவசக் கல்விக்குப் பாதிப்பு

## பல்கலை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு



தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பானது (NEPF) இலங்கையின் நீண்டகால இலவசக் கல்வியின் பாரம்பரியத்திற்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக உள்ளது என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. ☞ 2

## இது ரகசியம் அல்ல!

''பழைய குருடி கதவைத் திறவடி'' என்ற கதையாக தமிழ் அரசுக் கட்சிக்காரர்கள் பொதுவெளியில் ஆளாளுக்கு ஒரு கருத்தைத் தெரிவிக்கும் போக்கு மீண்டும் தொடங்கிவிட்டது. தேர்தல் காலங்களில் இந்தப் போக்கை 2020இலும் வாசகர்கள் அவதானித்திருப்பார்கள்.

இந்தத் தடவை தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிக்குவது தொடர்பில் எதிர் எதிர்க் கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் பத்திரிகை முதலாளியுமான சரவணபவனுமே இவ் வாறு கருத்துத் தெரிவித்துள் ளனர்.

இந்தப் பொது வேட்பாளரைக் களமிறக்கும் பின்னணியில் ராஜபக்சக்கள் இருக்கிறார்களா என்கிற சந்தேகம் இருக்கின்றது என்று சுமந்திரன் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளார். அதுமட்டுமன்றி "பொதுவேட்பாளர் என்கிற விடயம் வருகின்றபோது அது எவ்வளவுக்கு பொருத்தமானது என்கின்ற ☞ 2

# கெஹலியவின் மறியல் நீடிப்பு

சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 7 பேருக்கும் ஏப்ரல் 22 வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மாளிகாகந்த நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டது.

குறித்த மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, மருத்துவ விநியோகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர், வைத்தியர் கபில விக்ரமநாயக்க, மருந்து நிறுவன உரிமையாளர் உள்ளிட்ட 7 பேர் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 10ஆவது சந்தேகநபராக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் சமன் ரத்நாயக்க மற்றும் 11ஆவது சந்தேகநபரான ☞ 8

# நிவாரணம் வழங்க 2023இல் ரூ. 200 பில்லியன் செலவாம்

பொருளாதாரநெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 200 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (சமூக விவகாரங்கள்) ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (சமூக அலுவல்கள்) ரஜித் கீர்த்தி தென்னகோன் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டு மக்கள் எதிர்நோக்கிய கடுமையான பொருளாதாரச் சிரமங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசாங்கம் தனது பொறுப்பாகக் கருதுகிறது.

சமுர்த்தி உதவி, சமுர்த்தி கடன், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, 100 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, அங்கவீனர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் அஸ்வெசும கொடுப்பனவு என 2023 ஆம் ஆண்டில் ☞ 8

# சு.கவின் புதிய தலைவராக அமைச்சர் நிமல் நியமனம்

## சந்திரிகா தலைமையில் கூடிய கட்சியின் அரசியல் பீடம் முடிவு



சுதந்திரக் கட்சியின் புதிய பதில் தவிசாளராக, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று கட்சியின் அரசியல் பீடம் கூடி இந்த முடிவை எடுத்தது. தற்போதைய உள்ளக நெருக்கடி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, ☞ 8

# உயர் தரம் கற்றுவரும் 6000 மாணவருக்கு புலமைப் பரிசில்

## நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில்

2022/2023 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பொருளாதார சிரமங்களுக்கு முகங்கொடுக்கும் 6000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

அதன்படி மார்ச் மற்றும் ஏப்ரல் வரையிலான நிலுவைத் தொகையை 2024 மே முதல் வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

அதன்படி, மார்ச் 2024 முதல் அமுலுக்கு வரும் வகையில் மாதாந்தம் 6000 ரூபா வீதம் 24 தவணைகளுக்கு இந்த புலமைப்பரிசில் தொகை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல்கள் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.presidents-fund.gov.lk) அடுத்த சில நாட்களில் ☞ 2

# 2015இல் விட்ட தவறை இப்போது திருத்தினோம்

## சந்திரிக்கா அம்மையார் தெரிவிப்பு

2015 மைத்திரியை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவைத்துச் செய்த தவறை இப்போது திருத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடந்த கட்சியின் அரசியல் பீடக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் ☞ 2

# யாப்புக்கு அமையவே அனைத்து நியமனமும்

## சு.க. கூட்டம் தொடர்பில் பைசர் முஸ்தபா கருத்து

கட்சியின் யாப்புக்கு அமைவாகவே அனைத்து நியமனங்களும் தற்போது நடைபெற்றுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

இலங்கை ☞ 8

# நீதிமன்ற தடையை வைத்து அரசியல் செய்கிறார் சந்திரிகா

## கட்சியின் பதில் செயலாளர் குற்றச்சாட்டு

எமது கட்சியின் தவிசாளர் உள்ளிட்ட குழுவினருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள நீதிமன்றத் தடையை பயன்படுத்தி சந்திரிகா அரசியல் சதி செய்வதாக லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சாரதீ துஷ்மந்த மித்திரபால தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே ☞ 2

# 10 ஆயிரம் கோழிப் பண்ணைகளை மே மாதத்தில் தொடங்க நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

10,000 குடும்பங்களுக்கு கிராமத்தில் கோழிப் பண்ணை உற்பத்தி மையங்கள் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மே மாதம் இத்திட்டத்தை ஆரம்பிக்க அனைத்து நடவடிக்கைகளும் தயாராக உள்ளன என்று சமூகவலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ☞ 8

# நிறைவேற்று ஜனாதிபதி முறை வேண்டுமா இல்லையா என்பது இப்போது முக்கியமேயில்லை என்கிறார் ரணில்

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர வேண்டுமா அல்லது ஒழிக்கப்பட வேண்டுமா என்பதை இன்று நாடு எதிர்நோக்கும் மிக முக்கியப் பிரச்சினையாக மாற்ற சிலர் முயற்சிக்கின்றனர். அது முக்கியமில்லை என்று நினைக்கிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கண்டி சட்டத்தரணிகளுடனான சிநேகபூர்வ சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தைத் தொடர வேண்டுமா அல்லது அதை மாற்றியமைப்பதா என்பதை நாங்கள் தீர்மானிக்கவேண்டும். சம்மதித்துவிட்டு ஒவ்வொரு முறையும் முடிவை மாற்றிக்கொள்ளும் அவப்பெயர் இலங்கைக்கு உண்டு.

இதுவே நாட்டுக்காக எமக்கு கிடைத்துள்ள கடைசி வாய்ப்பாகும். எனவே, இந்த நன்மையை மக்களுக்கு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை ☞ 2

# காலநிலை மாற்ற சவால்களில் இலங்கைக்கு உதவத் தயார்

## உலக பசுமை வளர்ச்சி நிலையம் அறிவிப்பு

இலங்கை முகங்கொடுத்திருக்கும் காலநிலை மாற்ற சவால்களைக் கையாள்வதற்கு உதவுதல் உள்ளடங்கலாக இருநாடுகளுக்கும் இடையில் நிலவும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்தின் தலைவரும், ஐக்கிய ☞ 2

## இனி இது .....

கேள்வியும் இருக்கின்றது. அந்த விடயம் சம்பந்தமாக கட்சியாக நாம் கூடிப்பேசவில்லை. ஆகவே அதனை சாதகமாகப் பரிசீலிப்போம் என்று என்னால் இப்போதே உறுதியாக கூற முடியாது;" என்றும் அவர் தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியொன்றின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கு முற்றிலும் மாறாக பொதுவேட்பாளரை வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நேற்றுத் தெரிவித்தார். செய்தியாளர்களை அழைத்து தனது அலுவலகத்தில் தான் நடத்திய சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொலைக்காட்சிப் பேட்டியில் சுமந்திரன்மேலும்தெரிவித்ததாவது:

தமிழ் பொதுவேட்பாளர் என்று வருகின்றபோது, அவரை மையப்படுத்தி தென்னிலங்கை தீவிரவாத, இனவாத சக்திகள் ஒன்றுசேர்கின்ற, மீண்டும்ஆதிக்கம் செலுத்துகின்றநிகழ்வுகள்ஏற்படலாம். தோற்றுப்போயிருக்கின்றராஜபக்சக் களுக்கும்கூட உயிரூட்டும்செயலாகக் கூட அது அமைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

ராஜபக்சக்கள் கடந்த காலத்தில் தமிழ் பொதுவேட்பாளர் யுக்தியைக் கையாண்டு ஒருவரைக் களமிறக்கியும் உள்ளார்கள். அவ்வாறு பொதுவேட்பாளரை நிறுத்திவிட்டு, விடுதலைப்புலிகள்வந்துவிட்டார்கள் என்று புரளியைக் கிளப்புவார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டதால் தமிழர் ஒருவரை அவரது வெற்றிக்காக அங்கேகூடப் போட்டியிடச் செய்தார்கள்.

ஆகவேதமிழ்பொதுவேட்பாளர் என்கிற விடயம் வருகின்றபோது, இதன் பின்னால் ராஜபக்சக்கள் இருக்கின்றார்களா? சிங்கள, இனவாத சக்திகள் இருக்கின்றனவா என்கிற சந்தேகம் வருகின்றது - என்றார்.

சரவணபவன்தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் நிலையில் வாக்கு பிச்சைக்காக தென்னிலங்கை அரசியல்வாதிகள் படையெடுக்கும் நிலையில் எமது இருப்பினை பலப்படுத்த வடக்கு, கிழக்கு வாழ் பொது மக்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் பின்னரே ஜனாதிபதி தேர்தலுக்கான பொது வேட்பாளர் தொடர்பாக சிந்திக்கப்பட்டது. இருந்தும் அது தொடர்பாகக் கடந்த தேர்தல்களில் பேசப்படவில்லை. இம்முறைபொதுவேட்பாளர்குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது.

பொது வேட்பாளர் இல்லாத பட்சத்தில் பல மக்கள் இம்முறை வாக்களிக்காமல் இருப்பதற்கான சந்தர்ப்பங்களும்காணப்படுகின்றன. இம்முறை வேட்பாளர்களாக சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க, அனுரகுமார திசாநாயக்க ஆகியோரும் தற்பொழுது ராஜபக்சகளும் தயாராக இருக்கின்றார்கள் .எனவே சிங்கள மக்களின் வாக்குகள் பிரிக்கப்படும். அப்போதுஜனாதிபதியைமுடிவுசெய்பவர்களாகத்தமிழ்மக்கள்இருக்கப்போகிறார்கள். அதனால் தமிழர்களை எவ்வாறுஅரவணைத்துசெல்லலாம், தமிழர்களை ஏமாற்றி ஆசனத்தை பெறலாம் என அவர்கள் இனி சிந்திக்க தொடங்குவார்கள்

அனுரகுமார திசாநாயக்க யாழ். மாவட்டத்திற்கு அண்மையில் வருகை தந்திருந்தார். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கான உத்தரவாதத்தினையும் அவர் வழங்கவில்லை.தமிழ்இளைஞர்கள் இராணுவத்தில்இணைந்துவிட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்றும் சொல்லியிருக்கிறார், நாடு அபிவிருத்திஅடைந்துவிட்டால்வேறு எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று ரணில் விக்கிரமசிங்க கூறுவதைப் போலுள்ளது. .

தமிழர் மக்கள் நடந்ததை மிக விரைவில் மறந்து விடுவார்கள். இந்த முறை மறந்துவிடமாட்டார்கள் நான் மாத்திரம் அல்ல எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும். தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படக்கூடாது. எக்காரணம் கொண்டும் தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு நாம் வாக்களிக்கக்கூடாது.

இந்த பொது வேட்பாளர் தொடர்பில் பல பேர் பல வியாக்கியானங்களை கூறலாம். சேர்ந்து நில்லுங்கள் சேர்ந்த பெற்றுக் கொள்ளுங்கள் என பலர் கூறலாம். ஆளும் தரப்புகளுடன் இதற்குமுன்னர் நாங்கள் சேர்ந்து பயணிக்கவில்லையா? நல்லாட்சி காலத்தில் எவ்வளவு விடயங்களை நாங்கள் மேற்கொண்டும் ஏமாற்றப்பட்டோம் என்பதுதான் வரலாறு.

பொது வேட்பாளருக்கு பல பெயர்கள் அடிபடுகின்றன. யார் வேண்டுமானாலும் வேட்பாளராக இருக்கட்டும் மக்களால் ஏற்றுக் கொள்ளக் ஏற்றுக்கொள்ளக் கூடியவராக சிறிதளவேனும் அரசியல் ஈடுபாடு உடையவராக இருக்கவேண்டும். நிச்சயமாக தமிழ் மக்களால் ஒரு பொது வேட்பாளரை தேர்ந்தெடுக்க முடியும் அதனை தொடர்ந்து நாம் அடுத்த இலக்கு நோக்கி பயணிக்கலாம்.

அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒருவகையில்இந்தபொதுவேட்பாளர் குறித்து பேச தொடங்கியுள்ளன தமிழரசு கட்சி அது தொடர்பில் இன்னமும் பேசவில்லை தமிழ் அரசுக் கட்சி என்ன சொல்கின்றதோ எனக்குத் தெரியாது என்னுடைய நிலைப்பாடு பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படவேண்டும் என்பதுதான் - என்றார்.

போதாததற்கு தமிழ் அரசுக் கட்சி கடந்த காலங்களில் எடுத்த முடிவுகள் பிழையாகிப் போயின என்றும் கட்சியைச் சாடினார்.

''இலங்கை தமிழரசு கட்சி பல முடிவுகள் தமிழர்களுக்குச் சாதகமாக அமையவில்லை. சரத் பொன்சேகவிற்கு ஆதரவளிப்பதாக எடுத்த முடிவு பிழையாகப் போனது சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவளிப்பதாக எடுத்த முடிவு பிழையாகப் போனது. ஆகவே இந்த முறையும் அவ்வாறான தவறுகளை கட்சி விடாது என நம்புகின்றேன்'' என்றார். கட்சி அப்படித் தவறான முடிவுகளை எடுத்தபோது அவர் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து வந்திருக்கிறார். கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் செயற்பட்டு வந்திருக்கிறார். அதாவது கட்சியின் தவறானமுடிவுகள்எல்லாவற்றையும் அவரும் சேர்ந்துதான் எடுத்தார். அந்த முடிவுகளை எதிர்த்து அவர் ஒருபோதும் கட்சிக்குள் கிளர்ச்சியோ போராட்டமோ செய்தவரில்லலை என்பதுதமிழ்மக்களுக்குஇன்னமும் ஞாபகம் இருக்கும்.

தமிழ்அரசுக்கட்சிக்குத்தலைவர் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி இப்படி ஆளுக்கொரு கருத்துச் சொல்வதுமட்டும்எந்தவிதமாற்றமும் இன்றித் தொடர்கிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம்(FUTA) என்ற வகையில், இலங்கை ஆளும் தரப்பால் முன்மொழியப்பட்ட தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பை (NEPF 2023-2033) நாங்கள் கடுமையாகஎதிர்க்கிறோம், இதுநமது நாட்டின் நீண்டகால இலவசக் கல்வி பாரம்பரியத்திற்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக உள்ளது. கல்வியில் அரசின் பொறுப்பைத் திரும்பப் பெறுதல், அரச கல்விக்கான ஒதுக்கீடுகளை கைவிடுதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை(ஷீறூஎீ)ஒழித்தல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி ஹிசிஐணய்திட்டம்கல்விமுறையை முழுவதுமாக லாபம் ஈட்டும் வணிகமாக மாற்றுகிறது. இந்த சீர்திருத்தங்கள் கல்வியின் தரம் மற்றும் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களின் நலனை விட லாபத்தை முதன்மைப் படுத்துகின்றன. பல்கலைக்கழக மட்டத்தில் கட்டண விதிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், உயர்கல்விக்கான அரச நிதியை திரும்பப் பெறுவதன் மூலமும், சுதந்திரத்திற்குப்பிறகுஇலங்கையின் சமூக கட்டமைப்பில் மையமாக இருந்த கல்விக்கான சம அணுகல் கொள்கையை NEPF குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

மேலும், ஹிசிஐணய் இன் பொருளாதாரம் சார்ந்த பாடங்கள் மற்றும் டிஜிட்டல் மீது கவனம் செலுத்துகிறது, கல்வியறிவு விமர்சன சிந்தனை மற்றும் குடியுரிமை போன்ற கல்வியின் பரந்த இலக்குகளை புறக்கணிக்கிறது. மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்துகிறது. இந்த குறுகிய அணுகுமுறை தற்போதுள்ள வர்க்கப்பிளவுகளைஆழப்படுத்தவும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்த கூடியவகையிலும் அச்சுறுத்துகிறது. முன்மொழியப்பட்ட கட்டமைப்பானது, கல்விக்கான நியாயமான அணுகல் மற்றும் கல்வியின்தரத்தைஒழுங்குபடுத்தல் மற்றும்பேணுதல்ஆகியவற்றிற்கான பொறுப்பை வழங்குவதற்கான பல்வேறு உடன்படிக்கைகளுக்கு இலங்கையின் சர்வதேச கடமைகளை மீறுகிறது. மாறாக, முன்மொழியப்பட்ட கொள்கையானது இலவச கல்வியின் முற்றுப்புள்ளியாக செயற்படும். மக்களின் செலுத்தும் திறனை பொருட்படுத்தாமல் குடிமக்கள் என்ற வகையில் பெறுவதற்கான உரிமையைபறிக்கிறது. ஹிசிஐணய் நிர்வாகம், நிதி, தர உத்தரவாதம் ஆகியவற்றில் அரசின் பங்கை கடுமையாக மாற்றுகிறது.

இந்த சவால்களுக்கு விடையிறுக்கும் வகையில் FUTA, NEPF க்கான எதிர்ப்பைத் திரட்டி, இலங்கையில் இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக மாணவர் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உட்பட பிற பங்குதாரர்களுடன் இணைந்துசெயல்படும். அரசாங்கம் தனது முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களைத் திரும்பப் பெறவும், சந்தை சக்திகளை விட மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் நாங்கள் வலியுறுத்துகிறோம். ய்ஷீவீபு, சமூகத்தின் அனைத்து ஒத்த எண்ணம் கொண்ட பிரிவுகளுடன் சேர்ந்து,தீவிரமானநடவடிக்கைகளில் இறங்கும். இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக நாங்கள் தொடர்ந்து வாதிடுகையில், இந்த முக்கியமான போராட்டத்தில் எங்களுடன் சேருமாறு அனைத்து குடிமக்களையும் அழைக்கிறோம். அனைத்து இலங்கையர்களும் அவர்களின் பின்னணி மற்றும் சமூகப் பொருளாதார நிலைகளை கடந்து, எல்லோரும் சேர்ந்து கல்வி அடிப்படை உரிமையாக இருப்பதை உறுதி செய்யலாம். இறுதியாக, கல்வி போன்ற இன்றியமையாத விடையங்களின் கொள்கை வகுப்பதை ஜனநாயகத்தின் கேலிக்கூத்தாக மாறவிடக்கூடாது என்பதை வலியுறுத்தி, இந்த திட்டத்தைஉடனடியாகதிரும்பப்பெற வேண்டும்என்றுFUTAகடுமையாக கோருகிறது - என்றுள்ளது.

## 2015இல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு அனைவரும் என்னிடத்தில் கோரினார்கள். நான் முடியாது என்றேன். எனினும் சுதந்திக்கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரியை அந்தத் தேர்தலில் நிறுத்தினோம். மிகுந்த எதிர்பார்ப்புடன் அதனைச் செய்தோம்.

ஆனால் அவர் நாட்டையும் அழித்தார். கட்சியையும் அழித்தார். ஆகவே அந்தத் தவறை இன்று (நேற்று) திருத்தினோம். சுதந்திரக்கட்சியை மீண்டும் கட்டியெழுப்பமுடியும். அதற்கு நான் முழுமையான உதவிகளை வழங்குவேன்.

இந்தச் செயற்பாட்டிற்காக நான் மைத்திரிபாலவின் அனுமதியைப் பெறவேண்டியதில்லை. கட்சியின் யாப்பையே முழுவதுமாய் குழப்பியுள்ளனர். இப்போது யாப்பின் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

என்னை கட்சியிலிருந்து நீக்கினார்கள். பின்னர் நீக்கவில்லை என்றார்கள். நான் ஒருபோதும் கட்சியிலிருந்து செல்லப்போவதில்லை - என்றார்.

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகமுமான பான் கி-மூன் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் உறுதியளித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகமும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்தின் தலைவருமான பான் கி-மூன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கடந்த வாரம் சியோலில் நடைபெற்றது.

இதன்போது இலங்கைக்கும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்துக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பைப் பாராட்டிய பான் கி-மூன், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும், பல்வேறு துறைகளிலும் இருதரப்பினருக்கும் உள்ளவாய்ப்புக்களைஅடையாளம் காண்பதாகவும் பிரதமரிடம் உறுதியளித்தார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, 'புதுப்பிக்கத்தக்க சக்தி வலு, நிலைபேறான போக்குவரத்து வசதி மற்றும் பசுமை நகர உருவாக்கம் ஆகியவற்றின் ஊடாக பசுமையான, அனைவரையும் உள்ளடக்கிய, மீண்டெழும் தன்மையுடையபொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை ஆளும் தரப்பு முன்னெடுத்துவருகின்றது' எனத் தெரிவித்தார்.

அதேபோன்று இலங்கை ஓர் தீவு நாடு என்பதனால் இலகுவாகக் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தாக்கங்களுக்கு உள்ளாகும் நிலையில் இருப்பதாகவும், எனவே அத்தாக்கங்களிலிருந்து நாட்டுமக்களையும், சூழல் கட்டமைப்பையும் பாதுகாப்பதற்குஉடனடிநடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டிய அவர், இவ்விடயத்தில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் முயற்சிகளுக்கு அவசியமான ஆதரவை வழங்கக் கூடியவகையில் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்துடன் வலுவான பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

இலங்கை கடந்த 2019 ஆம் ஆண்டு உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்தில் ஓர் உறுப்பு நாடாக இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் எதிர்கால நடவடிக்கை குறித்து அரசியல் குழு கூடிக் கலந்துரையாடியுது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முன்னதாக, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, சுதந்திரக் கட்சியின் தவிசாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்தது.

சந்திரிக்காவின் தலைமையில் நடைபெற்ற சந்திப்புக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சான் விஜயலால் டி சில்வா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவிக்கு துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் கட்சியின் அரசியல் குழுவில் 11 உறுப்பினர்கள் இருப்பதோடு அவர்களில் ஆறுபேர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்

## உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும். மேலதிக விவரங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை (www.facebookcom/president.fund) லைக் பண்ணுமாறு அல்லது பின்தொடருமாறு (like/follow) செய்யுமாறு ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

தரம் 1 முதல் தரம் 11 வரை பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான ஒரு இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தற்போது முடிவடைந்துள்ளதுடன், புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றோரின் பட்டியல் எதிர்வரும் நாட்களில் வலய மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைக்கவுள்ளது.

இந்தப் பட்டியல்களைப் பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா வீதம் 12 மாதாங்கள் புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இந்தப் புலமைப்பரிசில் தொகையும் 2024 மே மாதம் முதல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளதோடு அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுதந்திரக்கட்சி இன்றைய தினம் (நேற்று) எந்தவிதமான அறிக்கையிடலையும் மேற்கொள்ளவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் என்ற வகையில் நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் குழுவினைக் கூட்டவில்லை.

அரசியல் குழு கூட்டத்தினைக் கூட்டுவது தொடர்பில் கட்சியின் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்சியின் தவிசாளர் கலந்து கொள்ளாது அரசியல் குழுவினைக் கூட்ட முடியாது. அத்தோடு கட்சியின் தவிசாளரின் ஆலோசனைக்கு அமைவாக பிரதம செயலாளரால் மட்டுமே கூட்டத்தினைக் கூட்ட முடியும் என்றே யாப்பில் கூறப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி அரசியல் குழுவின் மூன்று நான்கு அங்கத்தவர்களே இன்றைய (நேற்று) சட்டவிரோத கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். அவர்களின் பங்கேற்புடன் சந்திரிகாவின் தலைமையில் அரசியல் சதி மூலம் கட்சியை கைப்பற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

## நிறைவேற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டப்பூர்வமாக்க எதிர்பார்க்கிறோம். நாட்டின் மீதான பொறுப்பில் இருந்து நாம் யாரும் தப்ப முடியாது. எனவே, அதனால் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் சிக்கித் தவிப்பதா அல்லது போட்டிமிக்க ஏற்றுமதிப்பொருளாதாரத்தில்கவனம் செலுத்திநாட்டின்பொருளாதாரத்தை வலுப்படுத்துவதா என்பதை முடிவு செய்து நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தநாட்டின்பொருளாதாரத்தை மீண்டும் வலுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதற்கு தேவையான பௌதீக வளங்களும் மனித வளங்களும் எம்மிடம் உள்ளன. நம் நாட்டின் பல தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் தங்கள் தொழிலை நடத்தி வருகின்றனர்.

உலகின் மிகப் பெரிய பெருந்தோட்ட நிறுவனம் இலங்கை நிறுவனத்திற்கு சொந்தமானது. மேலும், உலகின் மிகப்பெரிய தேயிலைத் தோட்ட நிறுவனம் இலங்கையில் உள்ளது. உலக

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை வடக்கு பகுதி பறிபோகுமாயின் கிழக்கின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும்

## முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் தெரிவிப்பு




(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேசம் பறிபோகுமாயின் கிழக்கு இருப்பு கேள்விக்குறியாக போய்விடும். அம்பாறை தமிழ் தேச வரைபடத்தில் இருந்து நீக்கப்படும். ஆகவே, மக்கள் சிந்திக்க வேண்டும். - என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.



அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 14 ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்பு பேரணியுடன் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அங்கு விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு -

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 34 வருடங்களாக ஒரு சுயாதீனமான பிரதேச செயலகமாக இயங்கி வருகின்றது. ஆனால் இங்கு ஒரு தனியான பிரதேச செயலாளர் என்று ஒருவர் இல்லை. இது இலங்கையின் ஆச்சரியங்களில் ஒன்று. கணக்காளர் என்ற ஒருவர் இல்லை. கல்முனை தெற்கு பிரதேச செயலாளரின் எதேச்சையான அதிகாரத்தினுள் சட்டவிரோத உத்தரவிற்கு கட்டுப்பட்டு தான் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் செயற்பட்டு கொண்டு இருக்கின்றது. இது அரச எதேச்சை அதிகாரமாகும்.

இது அரச பயங்கரவாதம். 1993.07.23 ஆந் திகதி இலங்கை அமைச்சரவையில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் ஒரு சுயாதீனமாக இயங்குகின்ற பிரதேச செயலகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சரவை தீர்மானத்தை மீறி இந்த அரசானது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செயற்பட்டு கொண்டு இருக்கின்றார். இது சட்டத்தை மீறிய செயற்பாடாகும். ஓர் அமைச்சரவை தீர்மானத்தை மீறி எவ்வாறு கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செயற்பட முடியும். இதை நாம் அனுமதிப்போமாயின் தமிழ் தேச வரைபடத்தில் இருந்து கல்முனை வடக்கு அகற்றப்படும்.

தமிழர் தாயகத்தில் இருந்து கல்முனை வடக்கு பறிபோகப் போகின்றது. இது தான் அவர்களது சூழ்ச்சி. இது தான் அவர்களது நிகழ்ச்சி நிரல். இந்த சதிக்கு எதிராகத் தான் இந்த






மக்கள் போராடிக் கொண்டு இருக்கின்றார்கள். 14 நாள்களாக இந்த மக்கள் போராடி வருகின்றார்கள். இவர்களுக்கு இந்த நீதி கிடைக்கும் வரை மக்களோடு சேர்ந்து நாமும் போராடுவோம். இது வெறுமனே கல்முனை வடக்கின் பிரச்சினை மாத்திரம் அல்ல. தமிழ் தேசத்தின் பிரச்சினை .கல்முனை வடக்கிற்கு நீதி கேட்டு தமிழ் தேசம் திரள வேண்டும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி ,வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, திருகோணமலை, மக்கள் திரண்டு போராட வேண்டும். கல்முனை வடக்கு பிரதேசம் பறிபோகுமாயின் கிழக்கின் இருப்பு கேள்விக்குறியாக போய்விடும். அம்பாறை தமிழ் தேச வரைபடத்தில் இருந்து நீக்கப்படும்.

ஆகவே மக்கள் சிந்திக்க வேண்டும்.நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள்.அந்த வழக்கை மீறி கல்முனை வடக்கு பிரதேச செயகத்தை உப பிரதேச செயலகம் என கூறி கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. வழக்கைத் தாக்கல் செய்தவர்கள்(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்)பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஏன் திருகோணமலையில் நீதிமன்ற அவமதிப்பு என்று வழக்கு தாக்கல் செய்த உங்களுக்கு இங்கு இவ்வாறு வழக்கு தாக்கல் ஒன்றை நீதிமன்ற அவமதிப்பு என்று மேற்கொள்ள முடியாதா? முடியும்.ஆனால் எங்களது தலைவர்கள் கல்முனை வடக்கை சிங்கள பௌத்த பேரினவாதத்துடனும் சில அரசியல் தலைவர்களிடமும் விற்றுவிட்டார்கள்.

இதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.கல்முனை வடக்கிற்கு நீதி கிடைக்கின்ற வரை நாங்கள் போராடுவோம்.எங்களது கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.கல்முனை தெற்கு பிரதேச செயலாளரது அதிகாரங்கள் எமது பிரதேச செயலக எல்லையினுள் நிறுத்தப்பட வேண்டும்.நிறுத்தப்படுகின்ற வரை எமது போராட்டம் தொடரும்.கல்முனை வடக்கு தமிழ் தேசத்தின் ஒரு பகுதி என்பதை மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இங்கு இடம்பெறுகின்ற அநீதிகளுக்கு எதிராக தமிழ் தேசமாக நாங்கள் போராடுவோம்.நீதி கிடைக்கின்ற வரை எமது குரல்கள் ஓயப்போவது கிடையாது என மேலும் குறிப்பிட்டார்.

மேலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 14 ஆவது நாளாக நேற்று கவனவீர்ப்பு பேரணியுடள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பல்வேறு வடிவங்களில் தீர்வினை வலியுறுத்தி பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக 14 ஆவது நாளான இன்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து பேரணியாக போராட்டத்தை மக்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக



செயல்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாக பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளையும் கண்டித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் மேற்படி பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரத போராட்டம் பல அரசியல்வாதிகள் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் போராட்டத்தை கைவிடும் நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# செட்டிக்குளத்தில் நடந்த விபத்தில் இளைஞர் சாவு



வவுனியா- செட்டிக்குளம், வாழவைத்தகுளம் பகுதியில் இடம்பெற்ற பட்டா-மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் செட்டிக்குளம், வாழவைத்தகுளம் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் சனிக்கிழமை இரவு பயணித்த மோட்டார் சைக்கிளும், பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின. மேற்படி விபத்தில் படுகாயமடைந்த 21 வயதுடைய மோட்டார் சைக்கிள் சாரதியான அல்முதீன் மிஹ்ராஜ் என்ற இளைஞர் செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற செட்டிகுளம் போக்குவரத்து பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05 - 100)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாடு திருகோணமலையில்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாடு ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி மாநாடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்த சங்கரி தலைமையில் இடம்பெற்றது.

இதில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட கட்சியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பெண்களின் பாதுகாப்பு

லண்டனில் இருந்து வெளிவரும் உலகளாவிய இதழான டைம் அவுட், 2024இல் தனிப் பெண் பயணிகளுக்கான சிறந்த இடமாக இலங்கையை கடந்த வாரம் அறிவித்திருந்தது. தென்பகுதியில் நீராட விரும்பும் பெண் பயணிகளுக்கு இந்தியப் பெருங்கடல் தீவுதான் 'சரியான முதல் நிறுத்தம்' என அந்தச் சஞ்சிகை தெரிவித்துள்ளது. இலங்கை பெண்கள் தனித்துப் பயணிக்கச் சிறந்த இடமா என்கிற ஆச்சரியத்தால் கண்களை அகல விரியவைத்த செய்தி அது.

ஆசியாவில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது 'டைம் அவுட்' சஞ்சிகையின் கணிப்புச் சரியாக இருக்கலாம். இருப்பினும், இலங்கையில் உள்ள உள்ளூர் பெண்கள் இந்தக் கருத்தை எந்தளவு தூரத்திற்கு ஆதரிக்கிறார்கள் என்பது கேள்விக்குறிதான். உலகிற்குப் –முதல் பெண் தலைமை அமைச்சரை (பிரதமரை) தந்த நாடு, சுதந்திரமடைந்து 76 வருடங்களில் இரண்டு பெண்களை தலைவர்களாகத் தேர்ந்தெடுத்த நாடு என்கிற பெருமைகளைத் தாங்கியிருந்தாலும் இலங்கையில் பெண்களின் நிலை பெருமைப்படும்படியாக இருக்கிறது என்று சொல்லிவிடமுடியாது.

பிரித்தானியர்களினன் ஆட்சிக்குப் பின்னர் கடந்த 76 வருடங்களில் 23 வருடங்களை இந்த நாட்டில் பெண்களே ஆட்சி செய்தார்கள் என்றாலும் நாட்டின் பெண்களுக்குத் தாங்கள் எதையாவது செய்தார்கள் என்று அந்தப் பெண் தலைவர்கள் பெருமை பேசக்கூடியது எதுவும் இல்லை என்பதை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) உலகத் தொழிலாளர் அமைப்பு (ILO) போன்ற சர்வதேச அமைப்புகளால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் தெளிவுபடுத்தும்.

பாலின பாகுபாடு மற்றும் பாலியல் துன்புறுத்தல் ஆகியவை உலகம் முழுவதும் உள்ள உண்மைகள் என்றாலும் இலங்கையில் அது இன்னமும் அழுத்தமாக இருக்கின்றது. அத்தோடு அது பழமைவாதத்தில் ஊறிப் போயுமுள்ளது.

'இலங்கையில் பாலின ஊதிய இடைவெளி – கொள்கை தாக்கங்களுடன் ஒரு புள்ளியியல் ஆய்வு' என்ற தலைப்பில் சமீபத்திய உலக தொழிலாளர் அமைப்பின் அறிக்கை, இந்த 76 ஆண்டுகளில் பதவியில் இருந்த அனைத்து தலைவர்களுக்கும் எதிராக ஒரு கடுமையான குற்றச்சாட்டுக்களைப் பெண்கள் விடயத்தில் முன்வைத்துள்ளது.

ஆண் மற்றும் பெண் ஊழியர்களின் சனத்தொகையில் உள்ள வேறுபாடுகளை கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது, இலங்கையில் பாலின ஊதிய இடைவெளி (GPG) இன்னும் அதிகமாக உள்ளது என்று அந்த அறிக்கை கூறுகின்றது. கடந்த தசாப்தத்தில் அது கணிசமாகக் குறையவில்லை. 'இலங்கையில் பாலின ஊதிய இடைவெளி உலக சராசரி மற்றும் குறைந்த நடுத்தர வருமான நாடுகளின் சராசரி இரண்டையும்விட அதிகமாக உள்ளது என்று அறிக்கை மேலும் கூறுகிறது. அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்ற கருத்துக்களை உருவாக்குபவர்கள் உட்படச் சில துறைகளை இது பாதிக்காததால், இந்தப் பிரச்சினை பொதுக் களத்தில் அதிகம் பேசப்படுவதில்லை என்பது வருத்தமளிக்கும் உண்மை.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் ஆடைத் தொழில்துறையே இதற்குச் சிறந்த உதாரணம். அங்கு தையல் இயந்திரங்களை இயக்குபவர்களாகப் பெரும்பாலும் பெண்களே பணி புரிகின்றார்கள். இதற்கு ஒப்பிட்டளவில் குறைந்த திறனே தேவைப்படுகின்றது. அதேநேரம் இதைவிட அதிகத் திறன் தேவைப்படும் பொது செய்யும் பிரிவில் ஆண்களே பணிக்கமர்த்தப்படுகிறார்கள். இந்தப் பிரிவில் ஒரு பெண் பணிக்கமர்த்தப்பட்டாலும் அவருக்கு ஆண் பணியாளரைவிடச் சம்பளம் மிகக் குறைவாகவே வழங்கப்படுகின்றது. அவ்வளவு ஏன் இன்றும் தோட்டக் கூலியாட்களில் ஆணுக்கு நிகரான சம்பளம் பெண்ணுக்கு வழங்கப்படுவதில்லை. இந்த ஊதிய வேறுபாடுகள் முதலாளியின் மனநிலையின் காரணமாக எழுகின்றன –

இலங்கையின் அரசியலிலும்கூட பெண்களின் பிரதிநித்துவம் மிகக் குறைவாகவே இருக்கின்றது. உலக தொழிலாளர் அமைப்பின் அறிக்கைப்படி பெண்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இலங்கைக்கு 182ஆவது இடமே கிடைத்துள்ளது. இந்தப் பட்டியலில் மொத்தமுள்ளவை 192 நாடுகளே. மாலைதீவைவிட இலங்கையின் நிலை மேம்பட்டிருக்கின்றது என்று வேண்டுமானால் மகிழ்ச்சிப்பட்டுக்கொள்ளலாம்.

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பெண்களுக்கான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை மட்டங்களில் முறையே 25% மற்றும் 30% கட்டாய இட ஒதுக்கீட்டுக்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், அன்றைய ஆளும் தரப்பு மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டத்தை ஒரு பொருத்தமற்ற பிரச்சினையுடன் இணைத்தது. – கலப்பு தேர்தல் முறையுடன் இணைக்கப்பட்டதால் இந்த ஒதுக்கீட்டால் பெருமளவில் பயன் ஏதும் ஏற்படவில்லை.

உலக தொழிலாளர் அமைப்பின் கூற்றுப்படி, பாலின நிலைப்பாடுகள், பணியிடங்கள் மற்றும் தொழிற்சங்கங்களில் தலைமைப் பதவிகளில் பெண்களின் பங்களிப்பு இலங்கையில் மிகக் குறைவானவே காண்படுகின்றது. இவற்றில் போதியளவு மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

பாலின ஊதிய இடைவெளி நீடித்திருப்பதற்கான காரணங்கள் எதுவாக இருந்தாலும், அது நாகரீகமற்றது. 21 ஆம் நூற்றாண்டின் தரத்திற்கு அது சமமாக இல்லை.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# இனிக்கும் பனை

அங்கம் – 36



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனையின் பாளையிலிருந்து வடியும் நீர் நல்ல இதமாயும் பதமாயும் இருப்பதால்த்தான் அதனைப் ' பதனீர் ' என்று அழைத்தார்களோ தெரியவில்லை. உண்மையிலே பதனீர் தெங்கின் இளநீரைவிட வித்தியாசமான சுவையினை உடையதாகும்.பனையிலே வருகின்ற பாளைகளைப் பதப்படுத்திச் சீவியே பதனீர் பெறப்படுகிறது. பதனீரைப் பெறுவதற்குரிய மண் முட்டிகளுக்குச் சுண்ணாம்பு பூசப்படும். சுண்ணாம்பு கலப்பதால் சுவையான அமுதமான பருகும் பானமாகப் பதனீர் வந்து அமைகிறது.இதனைக் கருப்பணி என்றும் அழைப்பார்கள்.

பதனீரின் பயன்பாடு பழைய காலத்திலேயே ஆரம்பித்து விட்டதாக அறிய முடிகிறது.அக்கால அரசர்கள் விரும்பியுண்ட பானமாகப் பதனீர் விளங்கி இருக்கிறது.அதனை உறிதிப்படுத்துவதாக இப்பாடல் அமை கிறது.

**தீதறு நற்குல சேகரனைப் பார்த்து
சென்று வனத்திற் பனை யமிர்தங்
கோதற நீயிறக்கி கொடுவா வென்று
கூறியனுபினன் மின்னரசே**

அரசன் மட்டுமல்லாது அக்காலத்தில் அனைவருக்கும் விருப்பமான பானமாகப் பதனீர் இருந்திருக்கிறது என்றும் அறிந்திடக்கூடியதாக இருக்கிறது. புளிக்கா நிலையில் இருக்கின்ற பொழுது – பனையின் பாளை யின் சாறு வெறுக்கத்தக்கதாக இருக்கவில்லை. அதே சாறு புளித்த நிலையிலே அது கள்ளு என்னும் பெய ருக்கு உரித்தாகும் காரணத்தால் சமூகத்தில் வெறுத்து , ஒதுக்கும் நிலை அதற்கு ஏற்படலாயிற்று.ஒரு நிலை யில் யாவரும் விரும்பி ஏற்கும் பானமாகவும், இன்னொரு நிலையில் பலராலும் கண்டிக்கத்தக்க ஒரு பான மாகவும் – பனையின் பாளையின் சாறு காணப்படுகிறது என்பதைக் கருத்திருத்தல் அவசியமாகும்.சுவையான பானமாக இருக்கும் பதனீர் பல பெயர்களை தாங்கி நிற்கிறது, சுரம், அமிர்தம், புதுமது, தெள்ளமுது, பசுநரு, கருப்பநீர், கருப் பணி, என பல பெயர்களுக்கு உரித்தாகி நிற்கிறது.ஆண்பனைப் பாளைகளிலிருந்து எடுக்கின்ற பதனீருக்கு ' சோமபானம் ' என்றும் , பெண்பனையின் பாளையிலிருந்து எடுக்கின்ற பதனீருக்கு ' சுரபானம் ' என்று பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள் என்றும் அறிந்திடக்கூடியாத இருக்கி றது.

பனையின் பாளையிலிருந்து எடுக்கப்படுகின்ற சாறானது சுவையினைப் பயக்கவேண்டும் என்பதற்காக எங்களின் முன்னோர் கையாண்ட தொழில் நுட்பமாகவே – பாளைகளுடன் இணைக்கப்படும் மண்முட்டிகளில் சுண்ணாம்பினைப் பூசிய பாங்கினை நோக்கிட வேண்டியிருக்கிறது. சுண்ணாம்பின் காரத்தன்மையானது, மென்மையாய் இருக்கும் பாளையின் சாறானது காற்றிலே காணப்படுகின்ற நொதியங்களால் ஏற்படும் தாக்கத்திலிருந்து தாக்கப்படாமல் தடுத்துப்பாது காக்கும் காவலனாகவே செயற்படுகிறது என லாம். இப்படிச் செயற்படு வதால்த்தான் புளிப்பற்ற சுவையான பானம் கிடைக்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய செய்தியாகும்.

பதனீரை வெறும் சுவையான பானந்தானே என்று மட்டும் எண்ணி விடக் கூடாது, பதனீரானது பல மருத் துவ குணங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது என்பதை கருத்திருத்தல் அவசியமானதாகும். சுண்ணாம்பு பூசப்படுவதால் பதனீருடன் சுண்ணாம்புச்சத்து நன்றாகவே கலக்கிறது. இதனால் இது எலும்பு தொடர்பான நோய்களுக்கு மருந்தாகவும், எலும்புத்தேய்மானத்தினைக் கட்டுக்குள் வைப்பதாகவும் இருக் கிறது.கோடை காலங்களில் ஏற்படும் உடற்சூட்டைத் தணிப்பதோடு , சூட்டினால் ஏற்படுகின்ற கொப்புள ங்களைத் தீர்க்கவும் உதவி நிற்கிறது. பழைய கஞ்சியில் பதனீரினைக் கலந்து தடவி வந்தால் ஆறாத புண்க ளும் ஆறிவிடும் என்று சொல்லப்படுகிறது,சிறு நீர் சம்பந்தமான நோய்களுக்குச் சிறந்த மருந்தாகவும் அமைகிறது. சிறிநீரை நன்றாகவே வெளியேற்றவும் உதவியாய் இருக்கிறது.சமிபாடு அடையாமல் இருக்கும் நிலையில் பதனீர் கைகொடுத்து அஜீ ரணத்தை அகற்றியே நிற்கிறதாம்.மலச்சிக்கலென்பது பல சிக்க ல்களுக்கு வழிவகுத்துவிடும். அந்த மலச்சிக்கலையே பதனீர் அகற்றியே விடுகிறதாம்.

நோயாளிகளுக்கு மருந்தாகப் பதனீர் இருக்கிறது என்பதும் நோக்கத்தக்கது. கண்பார்வைக் குறைபாட்டினை நீக்கிடவும், இளம்பிள்ளைகளுக்குக் காதிலிருந்து



சீழ் வடிதலை மாற்றிடவும், தோலில் ஏற்படும் வியாதிகளை குணப்படுத்தவும் பதனீர் உதவி நிற்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.அத்துடன் அமையாது மேலும் பல நோய்களுக்கான மருந்தாகவும் அமைகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். கண்ணோய், வாயி ல் ஏற்படும் புண், சொறி, சிரங்கு, தடிமல், காசநோய், என்பனவற்றுக்கும் நல்ல மருந்தாகப் பதனீர் அமைகிற தாம். இரத்தத்தில் காணப்படுகின்ற செஞ்சீவ அணுக்களின் விருத்திக்கும் உதவியும் நிற்கிறதாம். என்பது நல்ல செய்தியாய் இருக்கிறதல்லவா !

மேலும் பல நோய்களுக்கு உகந்த மருந்துப் பொருளாகவும் பதனீர் அமைகிறது.மேக நோயுள்ளவர்கள் ஒரு மண்டலம் பதனீரை அருந்துவதால் நல்ல சுகத்தை அடைந்துவிட முடியுமாம்.பெண்களுக்கு ஏற்படுகின்ற வெள்ளைபடுதல் பிரச்சினையினையும் பதனீர் குண்மாக்குகிறது என்பதும் நோக்கத் தக்கதாகும்.இவற்றை விட – இரத்தக் கடுப்பு,

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம் இனிக்கும் பனை

4ம் பக்க தொடர்ச்சி...........



மூலச்சூடு, வயிற்றுப் புண், வாய்ப்புண், யாவற்றையும் நீக்குகிறதாம் பதனீர். உடல் மெலிந்தோர் பதனீரைக் குடித்து வந்தால் ஆரோக்கியமான உடல் அமைகிறது என்பதும் நோக்கத்தக்க தாகும்.

**பனையுணவும் பண்டமெலாம் பரமாகாரம்**
**பாளைதரும் நீர் குருட்டுப் பார்வை நீக்கும்**
**தினையளவு ஐயமிலைச் செவிடு போக்கும்**
**தீராத தேமல் சொறி சிரங்கை யோட்டும்**

**வினைதருமா சலக்கடுப்பை வெட்டை நோயை**
**வீக்கமழல் வாதமதை வெள்ளை யூற்றைத்**
**தனையுணவாய்க் கொள்ளுபவன் தனைச்சாராது**
**தற்காக்கு மதையுண்மின் தரணி யோரே**

**பனை இராசன் நாடகத்தில் வருகின்ற இப்பாடலும் பதனீரின் மருத்துவப் பயன்பட்டினுக்குச் சான்றினை அளிப்பதாகவும் அமைவதையும் நோக்கிட லாம்.**

பதனீரானது சுவையான பானமாக அமைவதோடு மருத்துவ பானமாகவும் அமைகிறது என்பதுதான் மிக வும் முக்கியமான கருத்தாகும். முகப்பொலி வினைத் தருவதோடு , களைப்பினையும் போக்கி நிற்கிறது பதனீர்.

சுண்ணமிட்டு முட்டிகட்டி தூக்கியெடுக் கும்பதனீர்
நண்ணுபசி தாக நலிக்குக்குகாண் - பெண்ணணங்கே
சோம்பல் திமிரகலுஞ் சூடுடம்பை விட்டேகும்
ஆம்பலமுந் தண்ணென் றகங்குளிரும் - ஆம்பிரத்திரத்தில்
காய்சீவி யிட்டுக் கருப்பனீர் காசினியோர்
வாயுருசி யாகவே மாந்திடுவர் - தூய
பயறிட்டுக் காய்ச்சிப் பருகுதலு முண்டு
நயமாகு நன்மிளகிட் டுண்ணச் - செயிர்நீர்

என்று எங்களின் நவாலியூர் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் பதனீரைப் பற்றிய தன்னுடைய மனக்கரு த்தினைச் செந்தமிழ்க் கவிதையாக்கித் தந்தி ருப்பதையும் கருத்திருத்த வேண்டும்.

‘ பனைமரம் எங்கள் அடையாளம்
பனையைக் காப்பது நம்கடமை
பனைமரம் எங்கள் தாயாகும்
பதனீர் என்பது தாய்ப்பாலே ‘
என்று ஒரு கவிஞர் பதனீரினை வியந்து பாடுகிறார்.

‘ கற்பகதருவைச் சார்ந்த காகமும் அமிர்த முண்ணும்
விற்பன விவேகமுள்ள வேந்தரைச் சார்ந்தோர் வாழ்வார் ‘

என்னும் பாடலில் , பனையினை நம்பிவாழும் காகங்களுக்கு அமிர்தமாக இருக்கின்ற பதனீரைப் பனை கொடுக்கிறதாம் என்னும் செய்தி சொல்லப்ப ட்டிருக்கிறது. பதனீர் என்பதை அமிர்தம் என்று இப்புலவர் எடுத்துக் காட்டு வது நோக்கத்தக்கதாகும். பதநீரைக் கொடுத்து பனை காகங்களைப் பாதுகாப்பது போல நாட்டு மக்களையும் மன்னனானவன் காத்திடல் வேண்டும் என்பதுதான் இப்பாடலின் கருத்தாகும். பனையின் செயலை மன்னனுடன் காட்டிய புலவரின் நோக்கானது - பனையின் மீதும், பதனீர் மீதும் கொண்ட ஆராக் காதலையும், பனையின் , பதனீரின் மகத்துவத்தையும் காட்டி நிற்ப தாகவே தென்ப டுகிறதல்லவா !

பதநீரில் பனிரெண்டு தொடக்கம் பதின்மூன்று விகிதம் சக்கரை சத்து , அத்துடன் அமினோ அமிலங் கள், விட்டமின் பி, கனிம உப்புக்கள், இரும்புச்சத்து, சுண்ணாம் புச்சத்து, தயமைன், பிளாவின்,புர தம் , ஆகியன அடங்கி இருக்கின்றன என்பது நோக்கத்தக்கதாகும்.

பதநீரை ; இந்தியா, இலங்கை, ஆபிரிக்கா, மலேசியா, இந்தோனேஷியா,தாய்லாந்து ஆகிய நாடுகள் அதிகளவில் பயன்படுத்துகின்றன என்றும் அறியக் கூடியதாக இருக்கிறது. பதநீரானது மகாராஷ்டிராவில் நீரா எனவும் , குஜராத்தில் நீரர் எனவும், ஆந்திரப்பிரதேசத்தில் கவுடு எனவும், கர்நாட காவில் இடிகா அல்லது பில்லவர் எனவும், ஒரிசாவில் நீரா எனவும் பெயரிட்டு அழைக்கப்படுகிறதாம் என்று அறிந்திட முடிகிறது,ஒவ்வொரு பகுதியிலும் பல பெயரினைப் பெற்று அங்குள்ளவர்களால் விரும்பி அருந்தும் பானமாகப் பதனீர் விளங்குகிறது என்பதும் இனிப்பான செய்தியாக இருக்கிறதல்லவா !

பதனீர் பனையில் இருந்து இறக்கப்பட்டாலும் அவ்வாறு இறக்கப்படும் பதனீரானது ஒரே சுவையாக இருக்க மாட்டா



தாம்.கட்டுப்பாளைப் பதனீர், அலகுப் பாளைப் பதனீர், பெண்பனையின் பதனீர், நுங்குப் பதனீர் என்று நான்கு வகையினதாக இப்பதனீர் அமைகிறதாம். இப்படி அமைகின்ற நிலையில் அவற்றில் காண ப்படுகின்ற இனிப்புச் சுவையும் மாறுபட்டதாகவேகாணப்படுமாம்என்பதுமனமிருத்தவேண்டிய கருத் தாய் அமைகிறதல்லவா ! பதனீரை அருந்தும் நிலைலும் அது இரண்டாக அமைகிறதாம். உடல் நலத்தையும் நல்ல வீரியத்தை யும்நாடிநிற்போர் அருந்தும்பதனீரானது ‘சுரபானம் ‘ என்னும் பெயரினைப் பெற்று நிற்கிறது. இவ்வகையான பதனீரானது பெண்பனையிலிருந்து கிடைக்கிறது என்பதும் நோக்கத் தக்க தாகும். ஆண்பனையிலிருந்து கிடைக்கும் பதனீரானது ‘ சோமபானம் ‘ என்னும் பெயரினைப் பெற்றி நிற்கிறது. இந்த வகையான பதனீரை அருந்தவதால் ஆன்மசுத்தி ஏற்படுகிறதாம் என்று சொல்லி இருக்கி றார்கள் என்று ம் அறியக்கூடியதாக இருக்கிறது.

100 மில்லி அளவான பதனீரை எடுத்து அதில் எப்படியான சத்துக்கள் எந்த அளவில் இருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

சர்க்கரை - 998 மி. கிராம்
புரதம் - 350 கிராம்
ஈரத்தனமை - 86 கிராம்
சாம்பல் - 0. 53 கிராம்
சுண்ணாம்புச் சத்து - 14.3 மி.கிராம்
பாஸ்பரஸ் - 10 மி.கிராம்
இரும்புச் சத்து - 0.30 கிராம்
அஸ்கோபிக் அமிலம் - 15.74 மி. கிராம்
தயாமின் - 82.3 மி. கிராம்
ரிப்போ பிளாவின் 44. 4 மி.கிராம்
நியாசின் - 674.4 மி. கிராம்

அதன் படி இவைகள் அனைத்துமே பதனீரில் இருப்பதாய் கண்டறிந்திருக்கிறார்கள். இதனால் பதனீரைப் பக்குவமாகவே பார்க்க வேண்டும். அதனைப் பருகுவதால் நல்ல பலன்கள் பல கிடைக்கின்றன என்பதை யும் கருத்திருத்துதலும் வேண்டும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மாவடிப்பள்ளியில் உலர் உணவு உதவி





(அஸ்லம் எஸ்.மௌலானா)

புனித ரமழானை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் மாவடிப் பள்ளி பிரதேச ஜம்மியதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி எம்.ஐ.எம்.றியால்ஹாமிமூலம்அடையாளப்படுத்தப்பட்ட பயனாளர்களுக்கு வை.டபிள்.யு.எம்.ஏ. மற்றும்சி.எஸ்.எம். டபிள்.யு.ஏ. பேரவைகளின் ஒருங்கிணைப்பில்கல்முனை ரஹ்மத் பவுண்டேசனால் உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாவடிப்பள்ளி அல்-அஷ்ரஃப் மகா வித்தியாலய ஹுஸைன் ஞாபகார்த்த மண்டபத்தில்சனிக்கிழமைஇடம்பெற்ற விநியோக நிகழ்வில்

பவுண்டேசன் ஸ்தாபகரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்தேசியஒருங்கிணைப்புச் செயலாளருமானரஹ்மத்மன்சூர்பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவற்றை வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் மாவடிப்பள்ளி ஜம்மியதுல்உலமாதலைவர் ஏ.எம்.முஹம்மதுதம்பி மௌலவி,மாவடிப்பள்ளி ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகசபைத்தலைவர் வை.ஏ.மனாப் உட்பட ஊர்ப் பிரமுகர்கள், பயனாளிகள், பிரதேசவாசிகள்மற்றும்பவுண்டேசன் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (05)

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் செயலாளராக நா.ரட்ணலிங்கம் தெரிவு





ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் செயலாளராகச் செயற்பட்டவரான ந. நல்லநாதர் (ஆர் ஆர்) உயிரிழந்த நிலையில் வெற்றிடமாக காணப்பட்ட பதவிக்கு நா.ரட்ணலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

ஜனநாயகத்; தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் பதவியை இரண்டு வருடங்களுக்கு புளொட்அமைப்பிற்குவழங்குவதற்குதீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் மூத்த தலைவர் நல்லநாதர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் அண்மையில் உயிரிழந்தார். அவரின் இடத்திற்கு புளொட் அமைப்பைச் சேர்ந்த நாகலிங்கம் ரட்ணலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (05 -100 )



காலைக்கதிர்
Kalaikkathir

## நிறைவேற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவில்நமதுஆடைத்தொழிலுக்கு உயர்ந்த இடம் உண்டு. எனவே, முயற்சி செய்தால் உலகை வெல்லலாம்.

நாம்கூடியவிரைவில்ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு திரும்ப வேண்டும். புதிய துறைகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

நமதுவர்த்தகநடைமுறைகளில் பெரிய மாற்றங்கள் இருக்க வேண்டும். பல சட்டங்கள் புதுப்பிக்கப்படவேண்டும். அத்துடன் உலகம் ஏற்றுக்கொண்ட பல நவீன சட்டங்கள் இன்னும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. உலகில் நாம் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், அந்தச் சட்ட கட்டமைப்பில் நாமும் இடம் பெற வேண்டும்.

பொருளாதார பரிவர்த்தனைத் திட்டத்தில்டிஜிட்டல்பொருளாதாரத்தில் கவனம்செலுத்தியுள்ளோம். டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவது டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான அனைத்து சட்டங்களையும் உள்ளடக்கியதாகஇருக்கவேண்டும்.

புதிய சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் காலநிலை மாற்ற சட்டங்களை கொண்டு வரவும் எதிர்பார்க்கிறோம். மேலும், நாங்கள்புதியநிதிச்சட்டங்களையும் வர்த்தகச் சட்டங்களையும் உருவாக்குகிறோம். புதிய வங்கிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையின் மூலம், அடுத்த10ஆண்டுகளில்நாட்டில்புதிய சட்டக்கட்டமைப்புஉருவாக்கப்படும். அது இலங்கையை நீண்டகால அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் வேலைத்திட்டமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தும்அதேவேளையில், ஏற்கனவே உள்ள சட்டங்களையும் திருத்தவேண்டும். இத்திட்டத்திற்கு பொருத்தமான நாடாக இலங்கை வெற்றிபெற, அதற்குரிய சட்டக் கட்டமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். நம் நாட்டில் முதலீட்டாளர்களைத் தக்கவைக்க முடியாததற்கு ஒரு காரணம், சட்ட நடவடிக்கைகளில் உள்ள தாமதமாகும்.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரம்திறக்கப்படும்போது, கொழும்புத் துறைமுக நகரை நிதி வலயமாக மாற்றுவதில் கவனம் செலுத்தியுள்ளோம். பின்னர் அது ஒரு கடலோர பொருளாதாரமாக மாறும். இது ஒரு தனித் துறையாக செயல்படுகிறது மேலும் புதிய விதிமுறைகளும் நடைமுறையில் உள்ளன.

பெண்களை வலுவூட்டும் சட்டம் மற்றும் பாலின சமத்துவ சட்டத்தையும் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார மாற்றத்தில் சட்டக் கட்டமைப்புகளும் நவீனமயமாக்கப்படவேண்டும். 20 வருடங்கள் முன்னோக்கிப் பார்த்து முடிவெடுக்க வேண்டும்.

இன்னும் 20 வருடங்களில் நானும் இங்குள்ள பெரும்பாலானவர்களும் உயிருடன் இருக்க மாட்டோம். ஆனால் இங்குள்ள இளம் வழக்கறிஞர்கள் இந்த நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான கடைசி வாய்ப்பு இன்று கிடைத்துள்ளது. எனவே நவீனமயமாகி உலகத்துடன் முன்னேறுவதா அல்லது பின்னோக்கிச் செல்வதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

1948 இல் சுதந்திரம் பெற்றதில் இருந்து, நமக்கு கிடைத்த எந்த வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆனால் இந்த ஆண்டு நாட்டைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர வேண்டுமா அல்லது ஒழிக்கப்பட வேண்டுமா என்பதை இன்று நாடு எதிர்நோக்கும் மிக முக்கியப் பிரச்சினையாக மாற்ற சிலர் முயற்சிக்கின்றனர். அது முக்கியமில்லை என்று நினைக்கிறேன்.

அதனை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். நாட்டிற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியா அல்லது பிரதமரா என்பதல்ல இன்றைய முக்கியமான பிரச்சினை. இலங்கையை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்பதே பி ரச்சினை. எனவே, உண்மையான நோக்கத்திற்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைவரும் ஒன்றிணையுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன் என்றார்.

## நிவாரணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரம் 184,098.27 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் நிவாரண உதவித்தொகை தேவைப்படும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும மேல்முறையீடுகள் மற்றும் நிலுவைகள் உட்பட 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை சுமார் 189,650.95 மில்லியன் ரூபா ஆகும்.

முதல் கட்டமாக நிவாரணம் பெறாதவர்களுக்கு 2024 பெப்ரவரியில் 1813 மில்லியன் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது. இது தவிர அஸ்வெசும மேன்முறையீட்டு மனுக்களை பரிசீலித்த பின்னர் மேலும் 13,697.35 மில்லியன் ரூபா நிதி வறுமையில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி கடனாக வழங்கப்பட்ட தொகையுடன், 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை ரூ. 199,608.62 மில்லியன் அதாவது சுமார் 200 பில்லியன் ரூபா. 2022 ஜூலை மாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர், டிசம்பர் 2023 வரை (17 மாதங்களுக்குள்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 129.93 பில்லியன்ரூபாவைவழங்கியுள்ளது, இதில்சமுர்த்திகொடுப்பனவாக 65.91 பில்லியன் ரூபா ஏழைகளுக்கு வறுமையில் உள்ள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவுகளுக்கு (பிறப்பு, திருமணம், இறப்பு, நோய்கள், புலமைப்பரிசில்கள், இரட்டைப் பிறப்புகள்) வழங்கப்படும் தொகை 4.52 பில்லியன் ரூபாவாகும். இது தவிர சமுர்த்தி வங்கி இதே காலப்பகுதியில் 59.5 பில்லியன் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இந்த ஆண்டு பாடசாலைக் குழந்தைகளுக்கு போசாக்கு உள்ள உணவுத் திட்டம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவித் திட்டம், ஏழைக் குடும்பங்களுக்கு இலவச 20 கிலோ அரிசி வழங்கும் திட்டம் ஆகியவற்றை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது. ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட 'லிய சவிய' கடன் திட்டத்தின் கீழ் 12ம வட்டிக் கடன் சுமையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மகளிர் தினத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்டன.

ஜனசவிய, சமுர்த்தி போன்ற முன்னைய வேலைத்திட்டங்களில் இடம்பெற்ற ஊழல், முறைகேடுகள் மற்றும் அதிகாரத்துவத்துக்கு மாறாகவே அரசாங்கம் இந்த சமூகப் பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்துகிறது.

அதன்படி, நாட்டில் 30 இற்கும் மேற்பட்ட பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. நிவாரணத் திட்டத்திற்காக உலக வங்கி 200 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது.

அதனை 05 வருட அவகாசத்துடன் 30 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். 2024 மார்ச் 31, க்குள் நிவாரணப் பயனாளிகளின் எண்ணிக்கை 1,854,308 ஆக இருக்கும் என்பதையும் கூற வேண்டும் என்றார்.

## கெஹலியவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பீட்டு குழு உறுப்பினர், வைத்தியர் துசித சுதர்சன ஆகியோர் ஏப்ரல் 10 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் அவர்களது பிணை மனு மீதான உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முதலாவது சந்தேகநபரான மருந்து விநியோக நிறுவனத்தின் உரிமையாளர் சுதத் ஜனக்க பெர்னாண்டோ, சாட்சி கூண்டிலிருந்தவாறு வாக்குமூலம் வழங்குவதற்கு சந்தர்ப்பம் கோரியிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொதுச்சொத்து சட்டத்தின் கீழ், குற்றப்புலனாய்வு திணைக்களத்தினருக்கு உள்ள விசாரணை செய்யும் அதிகாரம் கேள்விக்குறியாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அதனை செவிமடுத்த நீதிவான், நீதிமன்றில் முற்படும் ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள்ளிட்ட சட்டமா அதிபர்திணைக்கள அதிகாரிகளுக்கு இல்லாத பிரச்சினையை பிரதிவாதியினால் எழுப்ப முடியாது என சுட்டிக்காட்டினார்.

வாக்குமூலம் அளிக்கும் கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபரால் கூறப்பட்ட விடயங்கள் வலுவானதல்ல எனவும் நீதவான் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பொறுப்பான வாக்குமூலமொன்றை வழங்கவேண்டிய தேவை இருப்பின், தம்மிடம் இரகசிய வாக்குமூலத்தை வழங்க முடியும் என நீதிவான் இதன்போது தெரிவித்துள்ளார்.

## யாப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றக் கல்லூரியில் நேற்று கட்சியின் அரசியல் பீடம் கூடியதன் பின்னர் செய்தியாளர்களிடம் இவர் தெரிவித்ததாவது:

"கட்சியின் யாப்பு விதிகளை மீறி எந்தவிதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. அனைத்து நியமனங்களும் உரியவாறே செய்யப்பட்டுள்ளன. தவிசாளர் ஒருவருக்கு இடைக்கால தடை விதிக்கின்றபோது அதற்கு பதிலாக பிறிதொரு தவிசாளர் நியமிக்கப்படுவது வழமையானதாகும்.

அந்தச் செயற்பாடே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், எவ்விதமான முரண்பாடுகளும் இல்லை. மைத்திரிபாலவின் நிலைப்பாடு அல்ல இங்குள்ள பிரச்சினை" என்றார்.

நேற்றைய கூட்டம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்ததாவது:

கட்சியில் எப்போதும் ஒருவரே பதவி வகிக்கவேண்டும் என்று கருதவில்லை. அவ்வாறு ஓரிருவர் மட்டும் பதவிகளை வகிப்பதற்கு கட்சியொன்றும் தனிப்பட்ட சொத்து அல்ல.

இந்த விடயத்தினை மைத்திரிபால, மித்திரபாலா, தயாசிறி போன்றவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே அவர்கள் சரியான புரிதலுடன் மீண்டும் எம்முடன் இணைந்து செயற்பட வருகை தரவேண்டும் என்றார்.

## 10 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த வருடத்தின் கடைசி காலாண்டிற்குப் பிறகு, இந்த நாட்டில் பொருளாதாரச் சுருக்கம் குறைந்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த பொருளாதாரமாக மாறும் திறனைப் பெற்றுள்ளோம். நுகர்வோருக்கு கட்டுப்படியாகாத வாழ்க்கைச் செலவுக்குத் தீர்வுகளை வழங்குவதே எமது பொருளாதாரத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இம்முறை புத்தாண்டை வழமை போன்று கொண்டாட மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இவ்வருட புத்தாண்டுக்காக சமுர்த்தி வேலைத்திட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளும் இணைந்து நாடளாவிய ரீதியில் 1089 புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளன.

மாற்றுத்திறனாளிகள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 'முட்டி உடைத்தல் குருடர்களுக்கு உணவளித்தல்' என்ற அம்சங்கள் சமூகத்தால் இதுவரை நிராகரிக்கப்பட்டுள்ளன. அதனை எமது அமைச்சும் ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கு பதிலாக, 'அதிர்ஷ்டத்தின் பானையை உடைத்தல் மற்றும் தோழனுக்கு உணவளித்தல்' என்ற பெயர்களைப் பயன்படுத்துமாறு ஏற்பாட்டாளர்களுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் சமூகத்தில் கருத்தியல் ரீதியிலான மாற்றத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். மேலும், புத்தாண்டு விழாக்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம். இந்த நாட்டில் சுற்றுலாத்துறை கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்தது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த புதிய வேலைத்திட்டத்தின் காரணமாக இந்த ஆண்டு இதுவரை 635,784 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளனர். அதன் மூலம் நாடு 1025 மில்லியன் அமெரிக்க டொலர்களை சம்பாதித்துள்ளது. அனைத்து அமைச்சுகளும் சமூக வலுவூட்டல் திட்டங்களைத் தொடங்கியுள்ளன.

10,000 குடும்பங்களுக்கு கிராமத்தில் கோழிப் பண்ணை உற்பத்தி மையங்கள் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மே மாதம் இத்திட்டத்தை ஆரம்பிக்க அனைத்து நடவடிக்கைகளும் தயாராக உள்ளன என்பதைக் கூறவேண்டும். அதற்கான கடன்களும் உதவிகளும் வழங்கப்பட உள்ளன. தேயிலை பயிர்ச்செய்கைக்காக 14,000 குடும்பங்களுக்கு தேயிலைச் செடிகளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளோம்.

அஸ்வெசும பயனாளிகளுக்கு இலவச தேயிலை செடிகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஏனைய குடும்பங்களுக்கு 36% ஆக இருந்த வட்டியைக் குறைத்து 12% சலுகைக் கடன் வழங்கப்படுகிறது.

மேலும், பெண்கள் 'லிய சவிய' திட்டத்துடன் இணைந்து, எதிர்வரும் மே மாதம் முதல் எந்த ஒரு உற்பத்திக்கும் 12% வட்டியில் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும் - என்றார்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக தீர்விற்கான மக்கள் போராட்டம் 15 ஆம் நாளையும் எட்டியது



(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 15 ஆவது நாளாக நேற்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி பிரதேச செயலகத்தின் முன்பாக பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்.



அதன் தொடர்ச்சியாக 15 ஆவது நாளான நேற்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயற்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருவதன் காரணமாக பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்குமுறைகளையும் கண்டித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த பிரதேச செயலக



விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படவேண்டும் என்பதற்காக உண்ணாவிரத போராட்டம் பல அரசியல்வாதிகள் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் போராட்டத்தை கைவிடும் நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்குறித்த உண்ணாவிரதப் போராட்டம் அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிரதேச செயலகத்தின் முன்னால் உண்ணாவிரத போராட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதில் கல்முனை சுபத்திராமவிகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவர் சஜவஸ்ரீ க.கு.சச்சிதானந்தம் சிவம் குரு, கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சா.சந்திரசேகரம் ராஜன் மற்றும் அழகக்கோன் விஜயரத்னம் ஐக்கிய வணிகர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணப்பிள்ளை லிங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# இவாஸ்ட் சமூக சேவை அமைப்பால் உலருணவு பொதிகள் வழங்கிவைப்பு





(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையை பிரதிநிதித்துவபடுத்தி இயங்கி வருகின்ற சமூக சேவை அமைப்பு கடந்த 11 வருடங்களாக இயங்கிவருகிறது.

இவாஸ்ட் சமூக சேவைகள் அமைப்பால் கடந்த வருடங்கள் போல் இந்த வருடமும் மிகவும் சிறப்பான முறையில் வறிய மக்களை இனம்கண்டு அவர்களுக்கான உலருணவு பொதிகள் ஞாயிற்றுக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

இந்த அமைப்பு வருடாவருடம் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்திட்டம் அமைப்பின் அங்கத்தவர்கள், தனவந்தர்களின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படுகிறது.

இதன்போது அமைப்பின் அங்கத்தவர்களால் உலர் உணவுபொதிகள் சுமார் 70 இற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# லொறியில் மோதுண்டு 2 வயது குழந்தை சாவு

லொறியில் மோதுண்டு விபத்துக்குள்ளான 2 வயது குழந்தை உயிரிழந்த துயர சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அம்பாறை - பிபில பிரதான வீதியில் உள்ள நாமல் ஓயா பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியை சேர்ந்த பெற்றோர் தமது 2 வயது 7 மாதமேயான குழந்தையோடு அருகில் உள்ள விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளையில், குழந்தை பெற்றோரிடமிருந்து நீங்கி வீதிக்குச் சென்றபோதே விபத்தில் சிக்கியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தையை பெற்றோர் இங்கினியாகலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதன் பின்னரே குழந்தை உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியை இங்கினியாகலை பொலிஸார் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

(05)

# கல்முனை இஸ்லாமாபாத் வித்தி காஸா மக்களுக்கு நிதி உதவி!



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பலஸ்தீனில் இடம்பெற்று வரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட காஸா மக்களுக் காக மனிதாபிமான முறையில் அவர்களின் துயர் துடைக்கும் எண்ணத்துடன் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து ஒரு தொகைப் பணத்தை கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. ஜாபிரிடம் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத், பிரதி அதிபர் எம்.ரீ.ஏ.முனாப் ஆகியோர் இணைந்து கையளித்தனர்.

(05)

# வர்த்தக நிலையங்களை திறந்து வைத்த கிழக்கு மாகாண ஆளுநர் தொண்டமான்



செங்கலடி இலுப்படிச்சேனையில் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் நோக்கில் வர்த்தக நிலையங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமிய வர்த்தக நிலையங்கள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (05)





# முல்லையில் தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி பயிற்சி முகாம் திறந்து வைப்பு







தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி பயிற்சி முகாம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ப்ரமித்த பண்டார தென்னக்கோன் அவர்களால் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு பாதுகாப்பு படை கட்டளை தலைமையகத்தின் கீழ் நந்திக்கடல் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட இராணுவப் படையணி பயிற்சிப் பாடசாலை, தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி பயிற்சி பாடசாலையாக அமைப்பதற்காக இராணுவத்தினரால் தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணிக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

அதற்கிணங்க, இப்பயிற்சிப் பாடசாலையை தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி பயிற்சி பாடசாலையாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ப்ரமித்த பண்டார தென்னக்கோன் அவர்களால் ஞாயிற்றுக்கிழமை காலை 10. 30 மணிக்கு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது

ஏற்கனவே பல்வேறு இடங்களில் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு இதன்போது சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின் கல்வித் திணைக்கள அதிகாரிகள் இராணுவ உயரதிகாரிகள் வடக்கு கிழக்கை சேர்ந்த பல பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சமய நல்லிணக்க இப்தார் நிகழ்வு

## கிண்ணியாவில் நடந்தது

(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியாவில் அகம் மனிதா பிமான வளநிலையத்தினால் சமய நல்லிணக்கத்திற்கான இப்தார் நிகழ்வு கிண்ணியா பொது நூலக



மண்டபத்தில் இடம் பெற்றது.

அகம் மனித விமான வள நிலையத்தின் அனுசரணையுடன் கிண்ணியா பிரதேச சிவில் வலை அமைப்புக்களால் இந்த இப்தார் நிகழ்வு நடத்தப்பட்டது.

சமூக நல்லிணக்கம் என்பது





வலிமையான சமூக கட்டமைப்பை உருவாக்கும் என்று துணைப் பொருளின் கீழ் இந்த இப்தார் நிகழ்வு இடம் பெற்றது.

ஏ.எச்.ஆர்.சியின் பிரதான இணைப்பாளர் கே.லவகுசராசா,பிரதி இணைப்பாளர் ஏ. மதன், திட்ட முகாமையாளர் என்.மிரேக்கா,

ஏ.எச்.ஆர்.சியின் உத்தியோகத்தர்கள், மௌலவிமார்கள், கிறிஸ்தவ சமயப் பெரியார்கள், இந்து சமயப் பெரியார்கள், கிண்ணியா பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிண்ணியா நகர சபை செயலாளர், பிரதான உரை நிகழ்த்திய முஹம்மதுஜாபிர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# பொலீஸார் மீது கத்திக் குத்து

## விசுவமடுவில் சம்பவம்



கிளிநொச்சி தர்மபுரம் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலீஸ் உத்தியோகத்தர் இருவர் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியலவில சிவில் உடையில் விசுவமடு பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்ய முற்பட்ட வேலை சந்தேக நபர் பொலிஸார் மீது கத்தியால் தாக்கிவிட்டு தப்பி சென்று மீண்டும் அப்பகுதியில் வந்து தனது மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றுள்ளார்.

பொலிஸார் பலமுறை, துப்பாக்யை பிரயேகிக்கமுற்பட்ட வேலைதுப்பாக்கி இயங்கவில்லை. இச்சம்பவம் தொடர்பாக தருமபுர போலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கையும் மேற்கொண்டு வருகின்றனர். (05-113)



காலைக்கதிர்
Kalaikkathir

# புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்கு இடைக்கால நிர்வாகம் அமைப்பு



(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளி வாசலின் விசேட இடைக்கால நம்பிக்கையாளர் நியமன பத்திரங்கள் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீமால் வழங்கி வைக்கப் பட்டன.

இந்த நியமன பத்திரங்கள் 2024 ஏப்ரல் 01ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூன் 15ஆம் திகதி வரை (இரண்டரை மாத காலத்திற்கு) வழங்கப்பட்டுள்ளன.

பின்வருவோர் புதிய இடைக்கால விசேட நம்பிக்கையாளர்களாக நியமனம் பெற்றனர்.

தொழிலதிபர் எம்.டீ.ரூஹுல் ஹக், சட்டத்த ரணி எம்.ஏ.எம்.அஸீம், அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), ஆசிரிய ஆலோசகர் ஏ.டீ.எம்.நிஜாம், அஷ்ஷெய்க் எம்.எம்.முஹ்ஹசின், கிராம சேவையாளர்களான என்.எம்.ரஸ்மி, எம்.எப்.எம்.முஜாகித், எச்.ஆர்.எம்.ஜிப்ரி மற்றும் புத்தளம் வர்த்தக சங்க தலைவர் வை.எம்.நிஸ்தார் ஆகியோர்.

நியமனம் வழங்கப்பட்டமைக்கான பிரதியை பெரிய பள்ளியின் முன்னாள் நம்பிக்கையாளர் பஸால் ஹாஜியார் ஒப்பமிட்டு பெற்றுக் கொண்டார்.

பெரிய பள்ளியின் பழைய நம்பிக்கையாளர் சபையால் வேண்டிக் கொண்டதற்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி புதிய நம்பிக்கையாளர்





சபை ஒன்றை உருவாக்கும் வரையில் விசேட இடைக்கால நிர்வாகம் ஒன்றை நிறுவி அதற்கான நியமன பத்திரங்களையும் கையளித்தார்.

மேலும் இந்நிகழ்வில் புதிய இடைக்கால நிர்வாகக் குழுவின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (05)

# கள்ளப் பதிவாளர் அலுவலகம் காத்தான்குடியில் சிக்கியது

## ஒருவர் கைது



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கல்லடியிலுள்ள வீடொன்றுக்குள் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த சட்டவிரோத பதிவாளர் அலுவலகம் விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டதில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 54 வய தான ஒருவரே இந்த சுற்றிவளைப் பின்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து தரிசுக்காணி களுக்கான 205 உறுதிப்பத்திரங்கள், 58 வெற்று உறுதிப்பத்திரங்கள், 63 காணி மாற்று உறுதிப் பத்திரங்கள், கணினி, பிரின்டர், தட்டச்சு இயந்திரங்கள், வெள;வேறு அதிகாரிகளின் உத்தியோ கபூர்வ கையொப்பத்துடன் கூடிய 30 பத்திரங்கள், 12 தேசிய அடையாள அட்டைகளின் 12 பிரதிகள் என்பன கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் சந்தேக நபரும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள தாகக் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.ஜநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பதார்த்த சூடாமணி நூல் வலி. மேற்கில் வெளியீடு



அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட மருத்துவரும் உரை ஆசிரியருமான சித்தாந்த ரத்தினம் நா. கணேசலிங்கநாதன் உரை எழுதிய பதார்த்த சூடாமணி என்னும் நூலின் வெளியீடு நடைபெற்றது.

இந்த நூல் ஆய்வு உரையை மூத்த எழுத்தாளரும் சித்த மருத்துவருமான வெற்றிவேல் சக்திவேல் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் கவிதா உதயகுமார், உதவி பிரதேச செயலர் கி செந்தூரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# சமூக அபிவிருத்தி சபை ஏற்பாட்டில் வருடாந்த இஃப்தார் தின நிகழ்வுகள்

## முஷாரப் எம்.பி உட்படப் பலரும் பங்கேற்பு






மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்த வருடாந்த இஃப்தார் நிகழ்வு மாளிகைக்காடு அல்- ஹுசைன் வித்தியாலய அதிபர் ஏ.எல்.எம்.ஏ. நளீர் திறந்தவெளி அரங்கில் சமூக அபிவிருத்தி சபை தலைவரும், காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளருமான ஏ.எம். ஜாஹிரின் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் உலமாக்கள், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். றம்ஸின் பக்கீர், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செல்டன் ஜெகத், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா, பிராந்திய பாடசாலைகளின் அதிபர்களான ஏ.சி.எம். நளீம், எம்.ஐ.சம்சுதீன், எம்.எஸ்.எம். பைசால், இ.மி.சபை உத்தியோகத்தர் யூ.கே.எம். ரஸாக், கல்முனை தலைமையக தபால் அதிபர் யூ.எல். பைசர், மாளிகைக்காடு கிழக்கு கிராம உத்தியோகத்தர் ஏ.எம். நஜீம், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் அஸாம் எ அஸீஸ், அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள், பிரதேச முக்கியஸ்தர்கள், மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், ஜனாஸா எரிப்பு, ஈஸ்டர் தாக்குதல், கலகட அத்தே யானசாரவின் கைது, முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் உட்பட பல்வேறு விடயங்களை ஆழமாக பேசினார்.

நிகழ்வுகளை மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை செயலாளர் எஸ். பஸ்லூன் நெறிப்படுத்தினார். மார்க்க சொற்பொழிவை அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் தலைமை இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

(05)

# மாளிகைக்காடு அல்-ஹுசைன் வித்தியில் அதிபர் நளீரின் நினைவு மலர் வெளியீடு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளி கைக்காடு கமு/கமு/அல்-ஹுசைன் வித்தியாலயத்தில் மூன்று தசாப்தங்களாக கல்வி பணியாற்றிய அதிபர் மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் அவர்களது நினைவாக 'அடையாளம்' எனும் பெயரில் நினைவு மலர் வெளியீடும், இப்தார் நிகழ்வும், பாடசாலை மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் திறந்த வெளியரங்கில் ஞாயிற்றுக்கிழமை அதிபர் ஏ.சி.எம். நளீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டு மறைந்த அதிபர் மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் அவர்களின் நினைவுகள் தொடர்பில் உரை நிகழ்த்தினார்.



இந்நிகழ்வின் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பா ளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் கலந்து கொண்டதுடன் விஷேட அதிதியாக மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் அவர்களின் புதல்வர் எம்.ஏ.என். சுஹாத் ஹம்டி, கல்முனை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச். ஜாபீர், சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர் அரபாத் முஹீதீன், முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம். முக்தார், பாடசாலை ஸ்தாபக அதிபர் ஏ.எம். ,ப்ராஹீம், நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், அரச உயர் அதிகாரிகள், பிராந்திய பாடசாலைகளின் முன்னாள் மற்றும்



இந்நாள் அதிபர்கள், அரச உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், மர்ஹூம் ஏ.எல்.எம்.ஏ. நளீர் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின்போது அஷ்ஷெய்க் மௌலவி ஏ.கே.எம். சமீர் அவர்கள் துஆ பிரார்த்தனை நடத்தினார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# பென்னாவெளியில் சிமெந்து தொழற்சாலை அமைச்சர் டக்ளஸுக்கு சிறீதரன் கண்டனம்




கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னாவெளி கிராமத்தில் சுண்ணக்கல் அகழ்வுக்காக கடந்த வெள்ளிக்கிழமை சென்றிருந்த போது கிராம மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

இதில் கடல்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்ட மக்களை தாக்கியும் உள்ளார்.

இதுதொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் ஊடகசந்திப்பொன்றை அறிவகத்தில் நடாத்தியிருந்தார்.

கடல்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடைய நடவடிக்கைகள் இன்று நேற்று அல்ல. அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போதே தமிழர்களுடைய விரோத நடவடிக்கைகளை கொண்டவர் என்று வெளிப்படையாக எல்லோருக்கும் தெரியும் எனவும் அவருடைய சண்டித்தன அரசியல் அல்லது அடாவடி அரசியல் என்பது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி என பல இடங்களில் அவர் நடந்து கொண்ட விதங்கள் மற்றும் முறைகள் எல்லோராலும் உணரபட்டவைதான் அதனால்தான் அவர் ஒரு தமிழ் தலைவராக மக்களுக்கு வரமுடியவில்லை.

அவர் ஒரு நியாயமான கௌரவமான தமிழ்மக்களுடைய அபிலாசைகளை பிரதிநிதித்துவபடுத்துகின்ற ஓர் அமைச்சராக நாடாளுமன்ற உறுப்பினராகதன்னைஅடையாளப்படுத்தியிருந்தால் தமிழ்மக்களுடையவளங்களைகொள்ளையடிக்காமல் தமிழ் மக்களுடைய வளங்களை எதிர்கால சந்ததியினருக்கு பேணி வைத்திருக்க வேண்டும். இது எங்களுடைய சொத்து எமது இனத்திற்கானது என்பதை அவர் பின்பற்றியிருந்தால் அவர் இன்று தமிழ் மக்களால் போற்றி புகழப்பட்டிருப்பார். ஆனால் தமிழர்களுடைய நிலங்களை அபகரிப்பதிலும் மணல் எடுத்து விற்பதிலும் இப்பொழுது கல்லை தோண்டி விற்பதிலும் அதிகமான கரிசனை கொள்ளுகின்ற அமைச்சராக தன்னை அடையாளப்படுத்துவது ஓர் ஆரோக்கியமான விடயமல்ல.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னாவெளி கிராமமானது பாரம்பரியமான ஈழவுர் என்கின்ற சரித்திர பிரசித்தி வாய்ந்த வரலாற்று அடிப்படைகளைகொண்டபூர்வீகமாகவாழ்கின்ற மக்களை கொண்ட மண்ணாகும்.

அந்த பூர்வீக கிராமங்களில் இருக்கின்ற எத்தனையோ ஆண்டுகள் பேணி பாதுகாக்கப்பட்ட தமிழர்களின் சொத்தான முருகை கற்களை எடுத்து விற்று பிழைப்பு நடத்த முயற்சிப்பது மிகவும் மோசமானது எனவும் அது ஓர் இனத்திற்கு செய்கின்ற வரலாற்று துரோகம் கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை உணர்ந்து அடுத்த சந்ததிக்காகவாது அதுதோண்டுபடாமல்பாதுகாக்கப்பட வேண்டும் அது எமது இனத்துக்குரியது என்பதை சிந்தித்து கொள்ளவேண்டும்.

பொன்னாவெளிகிராமத்தில்சீமெந்துதொழிற்சாலை வரவில்லை அதில் இருக்கும் முருகைகற்களைத் தோண்டி அதனை திருகோணமலைக்கு கொண்டு செல்ல போகிறார்கள். அதனால் பொண்ணாவெளி கிராமத்தில் ஆலமான உப்புதண்ணீர் நிரம்பிய கிடங்குகள் உருவாக்கப்படும். இதேபோல் தான் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தில் இவ்வாறான கல் எடுக்கப்பட்ட ஆலமான கிடங்குகள் உண்டு.இதை விட மேசமாக பொன்னாவெளி கிராமத்தில் ஆலமான கிடங்குகள் கடலுக்கு அருகிலே தோண்டி கடல்நீர் கிராமத்திற்குள் உட்புகும் நிலமை உருவாகும் எனவும் தெரிவித்திருந்தார்.

அக்கிரம மக்கள் தொடர்ந்தும் அந்த மண்ணிலே வாழ முடியாமல் இடம்பெயர்கின்ற சூழ்நிலை உருவாகும் எனவும் எனவே இவ்வாறான செயற்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். (05-113)

# பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் விமானப்படை சிப்பாய் இறப்பு



பாதுக்கை - அங்கமுவ பகுதியில் பொலிஸாருடன் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது, பொலிஸ் வீதித் தடைக்கு அருகில், உத்தரவை மீறிசென்ற மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து பொலிஸார் பதிலுக்கு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இலங்கை விமானப்படைச்சிப்பாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஹொரணை - தல்கஹஹவில பகுதியில் குறித்தநபர் ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவரை கொலை செய்தவர் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து இலங்கைவிமானப்படையின் ஊடகப் பணிப்பாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவிக்கையில் -

நேற்று காலை பாதுக்கையில், உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகில் உள்ள விமானப்படையின் ரக்பி பகுதியில் கடமையில் இணைக்கப்பட்டிருந்த விமானப்படையின் கோப்ரல் தர வீரர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். ஆனாலும் அவர் கடமையில் இருக்கவில்லை.

இந்த சம்பவம் குறித்து விமானப்படை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. விமானப்படை வீரர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (05)

# பண்டிகை இனிப்புகள் வாங்குவோருக்கு நுகர்வோர் அதிகார சபை எச்சரிக்கை

பண்டிகைக்காலங்களில்இறக்குமதி செய்யப்படும் சொக்லேட் உள்ளிட்ட இனிப்பு வகைகளை கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறு நுகர்வோர் அதிகார சபை மக்களுக்கு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து, காலாவதியான இனிப்பு பொருள்களை இறக்குமதி செய்து திகதிகளை மாற்றி விற்பனை செய்ய முயன்றவர்களை நுகர்வோர் அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோன்று கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு சம்பா அரிசிவிற்பனைசெய்பவர்கள்தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 1977 இலக்கத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் கடைகளை சுற்றிவளைத்து சட்ட நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# தமிழ்க் கட்சிகளுடன் நாம் பேசுவோம் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக

## சுரேஸ் பிரேமச்சந்திரன் விடாப்பிடி



ஜனாதிபதிதேர்தலில்தமிழர்தரப்பில் பொது வேட்பாளரை நியமிப்பதற்காக தமிழ் தேசியப்பரப்பில் உள்ள தமிழ் கட்சிகளுடன் ஜனநாயகத்தமிழ்தேசிய கூட்டணி கலந்துரையாடவுள்ளதாக ஜனநாயகதமிழ்தேசியக்கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு கூட்டம் சனிக்கிழமை வவுனியா தனியார் விடுதியில் இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் குழுக்களை அமைக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

8மாவட்டங்களுக்குமானகுழுக்கள் இந்த மாத இறுதியில் அமைக்கப்படும். இதன் பின்னர் அனைத்து மாவட்ட குழுக்களையும் ஒன்று கூட்டி கூட்டமொன்றை வவுனியாவில் மே மாதம் 25 ஆம் திகதி நடத்தவுள்ளோம். இதனூடாகக் கிராம மட்டத்தில் எமது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை கொண்டு செல்லும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் தொடர்பாக நாம் கொள்கை ரீதியில் முடிவெடுத்துள்ளமை தொடர்பிலும் ஏனையவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

தற்போது இவ்விடயம் இங்கும் புலம்பெயர்தேசத்திலும்பேசுபொருளாக மாற்றப்பட்டுள்ளது. சில சிவில் அமைப்புக்களும்இதனைமுன்னெடுத்து செல்லும் பணியை செய்கின்றனர்.

இந்த வகையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளுடன் பேசவுள்ளோம். அத்துடன் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் முக்கிய அமைப்புக்களுடனும்கலந்துரையாடவுள்ளோம்.

அதற்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள அணியொன்று செயற்படும். இவர்கள் தமிழரசுக்கட்சி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் பேச விரும்பும் கட்சிகளுடனும்கலந்துரையாடுவோம்.

தற்போது இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம் மட்டுமே உள்ளது இனப்பிரச்சினை இல்லாதது போன்றதும் அது முடிந்து விட்டது போன்றதுமாக சொல்லப்படுகின்றது.

ஆனால் இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தீர்க்கப்படால்தான் அது சாத்தியம் என்ற விடயம் இருக்கின்றது.

அதனை சரியாகச் செயற்படுத்துவதற்கு நாம் இந்த ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்த வேண்டும். எனவே இந்த மாத இறுதிக்கிடையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கலந்துரையாடுவோம். – என்றார். (05)

# வயலின் வித்துவான் ஜெயராமன் காலமானார்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் தனது 65 ஆவது வயதில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை காலமானார்.

யாழ்ப்பாணம் - நீராவியடி இலங்கை வேந்தன்கலைக்கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலை நிகழ்வு ஒன்றில் வயலின் இசை வழங்கிக் கொண்டிருந்த நேரம் இயலாமை ஏற்பட்டு தொடர்ந்து வீட்டிற்கு சென்ற நிலையில்நேற்றுஅதிகாலை காலமானார்.

நாச்சிமார் கோவிலை அண்மித்த பகுதியில் உள்ள அன்னாரின் வீட்டில் எதிர்வரும்வியாழக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# வியாழேந்திரன் எம்.பி. ஏமாற்று வித்தைக்காரன்

## சாடுகின்றார் கல்முனை வடக்கு பிரதேச செயலக உண்ணாவிரதி



(பாறுக் ஷிஹான்)

வியாழேந்திரன் எம்.பி. ஏமாற்று வித்தைக்காரன். எனது வாழ்நாளில் மற்றும் அனுபவத்தில் கண்ட மிகப்பெரிய ஏமாற்று வித்தைக்காரன் இந்த வியாழேந்திரன் எம்.பி தான். இவரை விட நான் சகல விடயத்திலும் தகுதி உடையவன். அவரை பற்றிய கேள்வி எதனையும் என்னிடம் கேட்க வேண்டாம் என 2019 ஆண்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரத போராட்ட மேற்கொண்ட கல்முனை ஐக்கிய வணிகர் சங்க நிர்வாகஉறுப்பினர்கிருஷ்ணப்பிள்ளைலிங்கேஸ்வரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 14 ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் பாண்டிரப்பு பகுதியில் இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

வியாழேந்திரன் எம்.பி ஏமாற்றுவதில் பெரும் திறமைசாலி. கடந்த காலங்களில் நான் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் உண்ணாவிரதம் இருந்த போது அவர் எதிர்க்கட்சியில் இருந்தார்.இதன் போது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பல்வேறு புள்ளிவிவரங்களை அவ்வப்போது தெரிவித்திருந்தார்.அத்துடன் தமிழர்களாகிய நாங்கள் ஒற்றுமையாக இவ்விடயத்தில் செயற்பட வேண்டும் என்றும் கூறி இருந்தார்.தீர்வு இவ்விடயத்தில் கிடைக்காவிடில் கிழக்கு மாகாணத்தை முடக்குவோம் அடிப்போம் என்றெல்லாம் கூறி இருந்தார்.

ஒன்றும் நடந்த பாடில்லை.வியாழேந்திரன் எம்.பிக்காக 2020ஆண்டு தேர்தலில் வெற்றிக்காக பாடுபட்டவர்களில் நானும் ஒருவன்.அவ்வாறு அவர் வெற்றி பெற்றதும் முதலில் என்னை தான் காய் வெட்டினார். இன்று அவர் அமைச்சராகி 4 வருடங்களுக்கு மேலாக செல்கின்றது. மட்டக்களப்பில் இருந்து கல்முனை பிரதேசமானது 40 கிலோ மீற்றர் தூரம் தான்.இந்த 40 கிலோ மீற்றரில் இருக்கின்ற மக்களின் பிரச்சினைகளை கண்டறிவதற்கு இன்று அவருக்கு டீசல் இல்லை போலும். இன்று வரைக்கும் அவர் கல்முனை தமிழர்களை வந்து சந்திக்கவே இல்லை.இதன் மூலம் இவ்வாறானவர்கள் சொல் அளவில் தான் செயற்படுகின்றனர். ஒரு போதும் செயல் அளவில் செயற்படுவதாகத் தெரியவில்லை. மயிலந்தனை மடு பண்ணையாளர்களின் பிரச்சினை மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காவிடின் இவர் தனது நாடாளுமன்ற பதவியை விட்டு விலக சொல்லவில்லை மாறாக தனது அமைச்சு பதவியையாவது இராஜனாமா செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகின்றேன்.

சொல்லு பல்லக்கு தம்பி கால்நடை.சொல்வது ஒன்று செய்வது மற்றொன்று.எனது வாழ்நாளில் மற்றும் அனுபவத்தில் கண்ட மிகப்பெரிய ஏமாற்று வித்தைக்காரன் இந்த வியாழேந்திரன் எம்.பி. தான்.இவரை விட நான் சகல விடயத்திலும் தகுதி உடையவன்.அவரை பற்றிய கேள்வி எதனையும் என்னிடம் கேட்க வேண்டாம்.என கேட்டுக்கொள்கின்றேன். இவர் ஒரு சந்தரப்பத்தில் வேப்பவட்டுவான் பகுதியில் பாணை பச்ச தண்ணீரில் தொட்டு தின்றதாக குறிப்பிட்டிருந்தார்.இவ்வாறெல்லாம் கூறி ஏமாற்றுவது இவரது வேலையாகும் எனக் குறிப்பிட்டார். (05)

# பாரிஸ் மாநகரில் நடைபெற்ற 51ஆவது இலக்கியச் சந்திப்பு



பாரிஸ் மாநகரில் 51 ஆவது இலக்கியச் சந்திப்பு கடந்தசனி - ஞாயிறு (30 - 31மார்ச் 2024)தினங்களில் சிறப்பாக நடைபெற்றது.




புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள படைப்பாளிகள், இலக்கிய இரசிகர்கள், ஆர்வலர்களால் பல வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இலக்கியச் சந்திப்புநிகழ்வுகள் ஐரோப்பாவில் ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், டென்மார்க், நோர்வே, சுவிஸ் மற்றும் கனடா, இலங்கை எனப் பல்வேறு நாடுகளிலும் தொடர்ந்து நடைபெற்றுவந்தன.

கொரோனாக் காலத்தில் மட்டும் இலக்கியச் சந்திப்புதடைப்பட்டிருந்தது. கடந்த வருடம் 50 ஆவது இலக்கியச் சந்திப்பு அனலைதீவில் நடைபெற்றது.

இலக்கியச் சந்திப்புக்கென நிரந்தர நிர்வாகக் குழு இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் இதனை நடத்துவதற்கெனப் பொறுப்பேற்றுக்கொள்பவர்கள் தங்களுக்குள் ஒரு குழுவை அமைத்து இலக்கியச் சந்திப்புக்கான ஒழுங்குகளை மேற்கொள்வது வழமை.

அந்த வகையில் 51 ஆவது இலக்கியச் சந்திப்பு பாரிஸ் மாநகரில் நடைபெறச் சிறப்பான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

சனிக்கிழமை காலை (30 - 03 - 2024) பங்கேற்பாளர்களின் தன்னறிமுகத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. விஜியின் தொடக்கவுரையைத் தொடர்ந்து சிற்றிதழ்கள் அறிமுகம் இடம்பெற்றது. தில்லைநடேசன்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'காலம்' சஞ்சிகை குறித்து டானியல் ஜெயந்தன்;, 'ஜீவநதி' குறித்து மாதவி, 'மறுகா' குறித்து அகரன், 'வளர்'; குறித்து அசுரா ஆகியோர் அறிமுக உரைகளை நிகழ்த்தினர்.

அடுத்ததாக 51ஆவது இலக்கியச்சந்திப்புகதைமலர் 'இமிழ்' வெளியிடப்பட்டது. பிற்பகல் 'மலையக இன அடையாளம் பற்றிய பன்முகப் போக்கும் நோக்கும்' என்ற பொருளில் குணரட்ணராஜா தலைமையில் என். சரவணன் உரையாற்றினார். தொடர்ந்து அரவிந்த் அப்பாத்துரை தலைமையில் 'தமிழ் - பிரெஞ்சு மொழிபெயர்ப்பு இலக்கியங்கள்' என்னும் தலைப்பில் லெற்றிஷியா இபானேஸ் (பிரெஞ்சுப் பெண்மணி) சிறந்த உரை வழங்கினார்.

'இரு சகாப்தங்களுக்கு மேலான திருநங்கைகள் குறித்த தமிழிலக்கிய முன்வைப்புகளும் அதுசார் சிக்கல்பாடுகளும்' என்னும் பொருளில் விஜயன் தலைமையில் ஹரி ராஜலட்சுமி உரையாற்றினார்.

'சமகாலத்தில் இலங்கை இன முரண்பாடுகளின் திசை' என்னும் பொருளில் றஷ்மி தலைமையில் ராகவன் உரையாற்றினார்.

ஞாயிற்றுக்கிழமை காலை நூல்கள் அறிமுக நிகழ்வு தர்மு பிரசாத் தலைமையில் ஆரம்பமானது. 'நினைவு மறந்த கதை' நூல் குறித்து கலா சிறிரஞ்சன், 'சற்றே பெரிய கதைகளின் புத்தகம்' குறித்து நெற்கொழுதாசன், 'ஓய்வு பெற்ற ஒற்றன்' குறித்து வானிலா, 'வயல் மாதா' குறித்து நவமகன் ஆகியோர் அறிமுக உரைகளை வழங்கினர்;.

கே. டானியலின் 'சாநிழல்' நாவல் குறித்து வி. ரி. இளங்கோவன் உரை நிகழ்த்தினர். இந்நாவலின் அறிமுக நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம், சென்னைஇ தஞ்சாவூர், கனடா - ரொறன்ரோ ஆகிய இடங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடந்து 'பாலியல் சுரண்டல் - எதிர்கொள்ளலும் பொறுப்புக்கூறலும்' என்னும் பொருளில் விஜி தலைமையில் உமா உரையாற்றினார். பிற்பகல் 'போரும் ஏகாதிபத்தியமும்' என்னும் தலைப்பில் உதயகுமார் தலைமையில் நிர்மலா ராஜசிங்கம்இ கலையரசன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து எம். ஆர். ஸ்ராலின் தலைமையில் 'தமிழ் இனப்புல இயக்கவியல் (கோலாம்பூர் - சிங்கப்பூர் - பாரிஸ்)' என்னும் பொருளில் டெலோன் மாதவன் உரையாற்றினார்.

'இலங்கையில் சாதியம் - கள அனுபவம்' என்னும் தலைப்பில் துரைசிங்கம் தலைமையில் தேவதாசன் உரை நிகழ்த்தினார். நிறைவாக 51 ஆவது இலக்கியச் சந்திப்பின் கணக்கு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 52 ஆவது இலக்கியச் சந்திப்பை சுவிஸ் நாட்டில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

சுவிஸ், லண்டன், ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே நாடுகளிலிருந்து வந்த பலர்இலக்கியச் சந்திப்பில் இரு நாள்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இரு நாட்களும் உணவும் வழங்கப்பட்டது.

மாற்றுக் கருத்தாக்கம், மக்கள் சார்ந்த கருத்து, விவாதங்கள், உடன்பாடுகள், முரண்பாடுகள், சர்ச்சைகள், கேள்விகள், காரசாரமான உரையாடல்கள், சிறந்த உரைகள் எல்லாமே இடம்பெற்றாலும் தோழமையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவெய்தின. (05)

# பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் பங்கேற்பு



(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிராமிய வீதிகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் பங்குபற்றுதலுடன் பிரதேசசெயலகமாநாட்டுமண்டபத்தில்



சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி .ஜஸ்டினா முதளிதரன் சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

பிரதேச செயலக பிரிவில் உள்ள களுதாவளை மகா வித்தியாலயம், தேற்றத்தீவு மகா வித்தியாலயம், குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவர்களின் விளையாட்டு திறனை அபிவிருத்தி செய்வதற்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசபாடசாலைமாணவர்கள் தேசிய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் பல வருடங்களாக தமது திறமைகளை நிரூபித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில்தடைதாண்டல்ஓட்டப்



போட்டிக்கான உபகரணங்கள், பரிதி வட்டம், ஈட்டிகள், கூடைப்பந்து, கால்பந்து போன்றவிளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

உதவி பிரதேச செயலாளர் சத்ய கௌரி தரணிதரன், பட்டிருப்பு கல்வி வலய உதவிக் கல்வி பணிப்பாளர் (உடற்கல்வி) த.இதயகுமார், பாடசாலைகளின் அதிபர்கள், இராஜாங்க அமைச்சரின் இணைப்பாளர் த.தஜிவரன், பிரதேசசெயலகபதவிநிலைஉத்தியோகத்தர்கள், அலுவலகஉத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2024இல் வெளியிடப்பெற்றது